சதமணி மாலை

43

சுவடியியல் பட்ட மேற்படிப்புப் பட்டயத்திற்காக
அளிக்கப்பெற்ற பதிப்பாய்வேடு

இரா. திருவிக்கிரமன், எம். ஏ., எம். ஃபில்.,
பி. எட்., டிப். சம.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

மே - 1991

சதமணி மாலை

சுவடியியல் பட்ட மேற்படிப்புப் பட்டயத்திற்காக
அளிக்கப்பெற்ற பதிப்பாய்வேடு

இரா. திருவிக்கிரமன், எம். ஏ., எம். ஃபில்.,
பி. எட்., டிப். சம.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

மே - 1991

இரா. திருவிக்கிரமன், எம்.ஏ., எம். ஃபில்., பி. எட்., டிப். சுவ.,

சுவடியியல் மாணவர்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

சென்னை - 600 113.

உறுதி மொழி

சதமணி மாலை என்னும் பெயரிய இவ்வாய்வேடு சுவடியியல் பட்டய மேற்படிப்புக்காகப் பதிப்பிக்கப் பெற்றது. இப்பதிப்பாய்வேடு என் சொந்த முயற்சியில் உருவானதே என்று, இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதி கூறுகிறேன்.

சென்னை - 600 113

நாள்: 3.06.'91.

R திருவிக்கிரமன்

(இரா. திருவிக்கிரமன்)

முனைவர் பூ. சுப்பிரமணியம்
சுவடி இயல் துறை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

சான்றிதழ்

'சதமணி மாலை' என்னும் இச்சுவடிப் பதிப்பாய்வு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 1990 - 91 ஆம். ஆண்டிற்கான சுவடியியல் பட்டயச் சான்றிதழ்த் தேர்வுக்காக திரு. இரா. திருவிக்கிரமன், எம். ஏ., எம். ஃபில்., பி. எட்., டிப். சுவ., அவர்களால் உருவாக்கப் பெற்றது என்றும், இந்த ஆய்வின் மீது இவருக்கு வேறு எந்தப் பட்டமும் அளிக்கப் பெறவில்லை என்றும் சான்று வழங்குகிறேன்.

சென்னை - 600 113
நாள் : 3.06. '91.

3.6.91
நெறியாளர்.

நன்றியுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆண்டு தோறும் நடத்தி வரும் சுவடியியல் பட்டய வகுப்பில் சேர்வதற்கு எனக்கு அனுமதியளித்த முன்னாள் இயக்குனர் டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களுக்கு என் நன்றி. பட்டய வகுப்பின் ஆசிரியராக விளங்கி, ஆய்வு நெறிமுறைகளைக் கற்பித்து வழிகாட்டிய டாக்டர் பு. சுப்பிரமணியம் அவர்களுக்கு என் நன்றி. சுவடியியல் வகுப் பாசிரியர்களாக விளங்கி இத்துறையைத் தெளிவு படுத்திய டாக்டர் அன்னிதாமசு, டாக்டர் சிவகாமி, டாக்டர் சசிவல்லி, டாக்டர் மகாலட்சுமி ஆகியோர்க்கு என் நன்றி.

இப்பட்டய வகுப்பிற்கும் பதிப்பாய்விற்கும் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய நூலகர்கட்கு என் நன்றி.

ஆய்வேட்டை நன்முறையில் தட்டச்சு செய்தற்கும் கட்டுதற்கும் வழிகாட்டித் துணை நின்ற திரு தி.மு. கந்தசாமி அவர்களுக்கு என் நன்றி. மற்றும், பல்லாற்றானும் இவ்வாய்வுக் காலத்தில் பெருதவியாய் நின்ற அனைவர்க்கும் என்னும் என் நன்றி உரித்து.

பொருளடக்கம்

பொருள்	பக்கங்கள்
பதிப்புரை	1 - 7
பொதுநிலை ஆய்வு	
சிற்றிலக்கியங்கள்	8 - 13
மாலை இலக்கியம்	14 - 25
சிறப்பு நிலை ஆய்வு	
ஆசிரியர் வரலாறு	26 - 31
நூலாய்வு	32 - 39
நூற்பொருள்	40 - 71
நூல்	72 - 97
துணைநூற் பட்டியல்	98 - 99
பின்னிணைப்பு	
சித்தாந்த சூத்திரங்கள்	100 - 103
சொல்லடைவு	104 - 114

பதிப்புரை

பதிப்புரை

பழந்தமிழரின் பெருமைகளின் உறைக்களமாக விளங்குவன சுவடிகள். இப் பழந்தமிழ்ச் சுவடிகளைப் படித்தறிந்து, பதிப்பிப்பது என்பது ஒரு தனியே கலை. பண்டைத் தமிழ் இலக்கியம், இலக்கணம், இசை, நாடகம், மருத்துவம், சோதிடம் முதலான பல்துறைகளிலும் பிறந்த நூல்கள் சுவடிகளிலேயே எழுதி வைக்கப் பெற்றன. இவை தலைமுறை தோறும் படியெடுத்தலின் வழியே உரைகளின் மூலமும் பல்கிப் பெருகின.

சுவடிகள் நம் நாட்டில் மிகுதியாக வழங்குவதற்குரிய காரணங்களை ஆராய்வோமானால் அவை: 1. நம் நாடு வெப்பமண்டல நாடு. எனவே பனை மரங்கள் மிகுதியாக விளைகின்றன. 2. பனை ஓலைகளைச் சுவடிகளாகத் தயாரித்தல் எளிது. 3. அவற்றில் எழுதுதல் எளிது. 4. எடுத்துச் செல்லல் எளிது. 5. பாதுகாத்தல் எளிது.

என்றவாறு அமைகின்றன, பனைஓலைகள் ஒருசில நூற்றாண்டுகளே நிலைக்கக் கூடியன. தட்பவெப்ப நிலை மாறுபாடுகள் மழை, வெயில் ஆகியவற்றாலும் இராம பாணம், கரையான் முதலிய பூச்சிகளாலும் செயற்கையாக அழிவுகள் நிகழ்கின்றன. இத்தகைய அழிவுகளின் காரணமாக நாம் இழந்த சுவடிகள் மிகப் பல. எஞ்சியுள்ள சுவடிகளைப் பதிப்பித்துப் பாதுகாத்தலின் வழி நம் பழந்தமிழ் இலக்கியங்கள் போற்றிப் பாதுகாக்கப் பெறும்.

அச்சுக்கலையின் வரவு ஏட்டுச் சுவடிகள் பலவற்றை அச்சு நூல்களாக்கி வாழ்வித்தது. உ.வே. சாமிநாதையர் வையாபுரிப்பிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை ஆகியோர் தொடக்கிய பதிப்புப்பணியால் பல அரிய சுவடிகள் நூல் வடிவம் பெற்றன. அவ்வழியிலேயே 'சதமணி மாலை' என்ற இச்சுவடியும் நூல் வடிவம் பெறுகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆண்டுதோறும் சுவடியியல் என்ற பட்டய வகுப்பை நடத்தி வருகின்றது. அவ்வகுப்பின் வழி ஆண்டுதோறும் பழந்தமிழ்ச்சுவடிகள் பல பதிப்பாய்வு செய்யப் பெறுகின்றன. அவ்வகையில் இவ்வாண்டு ஆய்வு செயப்பெறும் சுவடிகளுள் ஒன்றாக இச் சதமணி மாலை ஆய்வாளரால் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

சுவடி பற்றிய செய்திகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன சுவடித்துறை நூலகத்தில் 21-ஆம் எண்ணுள்ள சுவடியில் இந்நூல் அமைந்துள்ளது. 15 ஏடுகளைக் கொண்டதாக இச்சுவடி அமைந்துள்ளது. இதன் நீளம் 27 செ.மீ. அகலம் 3 செ. மீ, சுவடியின் இருபுறமும் மரச்சட்டம் உள்ளது. சுவடியை நன்கு கட்டுவதற்கேற்ப சுவடியின் நடுவில் இருபொத்தல்கள் உள்ளன. சுவடியின் ஏடுகள் ஓரம் சிதைந்தும் தேய்ந்தும் செல்லரிக்கப் பட்டுள்ளன. ஏடுகளின் மையத்திலும் ஆங்காங்கே பூச்சி அரிப்புகள் காணப்படுகின்றன. இத்தகைய குறைபாடுகளினால் சிற்சில எழுத்துகள் சிதைந்துள்ளன.

அக அமைப்பு

நூலின் தொடக்கத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் கட்டளையிட்ட 'சதமணி மாலை' என்று நூலின் பெயர் சுட்டப் பெற்றுள்ளது.

நூல் தொடக்கம்

நூலின் தொடக்கமாக திருச்சிற்றம்பலம் என்ற சைவம் சார்ந்த வணக்கத் தொடர் காணப்படுகிறது. மேலும், 'சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க' என்ற ஒரு வணக்கத் தொடர் இடம் பெற்றுள்ளது.

நூல்

நூலுள் நூறு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பாடல்கள் யாவும் அடிகளோ சீர்களோ பிரிக்கப் பெறாமல் உரைநடை போன்றே இடையீடின்றித் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன. ஒரு பக்கத்திற்கு எட்டு வரிகள் இடம் பெற்றுள்ளன. பக்கத்திற்கு மூன்றிலிருந்து நான்கு பாடல்கள் வரை இடம் பெற்றுள்ளன. இவ்வாறு பதினைந்து ஏடுகளில் நூறு பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பண்டைத் தமிழ் முறையில் எண் கொடுக்கப்பெற்றுள்ளது. பாடலில் இடம் பெற்றுள்ள பொருள் பொருண்மை அடிப்படையிலான குறிப்புத் தொடர் ஆங்காங்கே சுட்டப் பெற்றுள்ளன.

யாப்பு

சதமணிமாலை என்னும் நூல் செய்யுள் வடிவில் அமைந்தது. இதன்கண் இடம் பெற்றுள்ள பாடல்கள் யாவும் கலிவிருத்தம் ஆகிய பாவினங்களால் இயற்றப்பெற்றுள்ளன. இவற்றுள் கலிவிருத்தமே முதன்மையாக விளங்குகிறது. அறுபத்தொரு பாடல்கள் கலிவிருத்த யாப்பிலேயே அமைந்துள்ளன. பதினேழு பாடல்கள் கட்டளைக் கலித்துறை யாப்பில் ஆகியுள்ளன. அறுசீரான் இயன்ற ஆசிரிய விருத்த யாப்பின பிற. கடவுள் வணக்கச் செய்யுள் 'கண்ணி' எனப் பெறும் ஈரடியாப்பினால் இயன்றது.

கலிவிருத்தமாவது அளவொத்த நாற்சீரடியான் அமைவது ஆகும். சான்றாக.

> படைப்புறு பெ ்றுகொல் பரம னாருயிர்க்
> கடுத்துள பய றித் தைம்மு கங்களால்
> எடுத்துரை (்தன விளிது தாயினென
> நடக்குறு (கலை ஞான மென்பவே (4)

எனும் இப்பாடல் கலி விரு யாப்பினது.

கட்டளைக் கலித் ்யாவது. ஐஞ்சீரான் இயன்ற அளவொத்த நான்கடிகளால் ஆகியது. அடிதோறும் நேரசையாயின் 16, நிரையசையாயின் 17 ் ழுத்துக்களைப் பெற்றதாக அமைதல் வேண்டும். எனினும் இந்நூல்கண் இட பெற்றுள்ள கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் இவ்வாறு எழுத்துவரைய ்கு உட்பட்டன வல்ல.

> இல்லை ம்மல மென்றுரை செய்வை யேவென்கொல்
> சொச் போகமுற் றழுந்துதல் சுத்த னாமென்னில்
> அல்ல ்மப் போக மின்றவர்க் கெனவுரைவர்
> புல்வ தம்பின மகன்றுள நல்லி சைப்புலவர் (35)

னும் பாடல் கட்டளைக் கலித்துறையாக அமைந்து விளங்குகிறது.

ஆசிரிய விருத்தமாவது ஐஞ்சீரின் மிக்க அடிகள் நான்கு அளவொத்து அமைவது ஆகும். அவை சீரின் எண்ணிக்கைக்கு ஏற்ப

அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

என்றவாறு பெயர் அமைப்பு பெறுகின்றன. இவற்றுள் அறுசீரான் இயன்ற ஆசிரிய விருத்தப் பாக்களே இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

பதியதிற் டாலந் தன்சீர்ப் பரையெனப் பட்ட சத்தி
முதிரொளிப் படிவ மாக மொழிந்தவச் சிதாகா சத்தில்
விதிர்விதிர்ப் பின்றி நின்று விளங்குறு மூர்த்தி மானாத்
துதிகொளப் பதிதா னென்பர் தோமிநூல் வாய்மை கண்டோர்
(9)

என்ற பாடல் அறுசீர் ஆசிரிய விருத்தப் பாவினதாகும்.

எழுத்தமைப்பு

எழுத்துகள் படிக்கக் கூடியனவாக உள்ளன. முத்துமுத்தான எழுத்துகளால் நூல் அழகு மிளிர எழுதப் பட்டுள்ளது. நூலின் இறுதிக் குறிப்பில் சூர்ப்பனகை எழுத்து என்ற குறிப்பு காணப்படுகிறது. [சூர்ப்பநகை என்பது மயக்குறும் எழில் கொண்ட நகை என்ற அடிப்படையில் அப்பற்களுக்கு உவமையாக விளங்கும் முத்துக்களைச்

சுட்டுகின்றது. முத்தான கையெழுத்து என்பது இதன் பொருள் (இது அல்லாது நூலின் கையெழுத்தும் இவ்வுவமைக்கு ஏற்பவே அமைந்துள்ளது.)

இகர உயிர் வடிவம் ஞ என்றவாறு உள்ளது. ஈகார உயிர் வடிவம் ОπО என்ற வகையில் காணப்படுகிறது.

பிழைத்திருத்தம்

நூலின் கண் எழுத்துப் பிழைகள் மற்றும் விடுகைகள் படியெழுத்தோராலேயே திருத்தம் செய்யப் பெற்றுள்ளன. அவ்வாறு திருத்தும் நிலையில் திருத்த எழுத்துகளை அவ்வச் சீருக்கு நேர்க் கீழேயே எழுதும் வழக்கு காணப்படுகிறது. மேலும் அவ்வாறு திருத்தத்துக்கு உட்படும் இடத்தில் '-' என்ற குறி பயன்படுத்தப் பட்டுள்ளது.

சான்று

பொழு~து~ம்	(18:1)
அறை~ஞ~வர்	(40:4)
ஞானமான~தா~ற்	(:3)
சத~மணி~மாலை	(சியுரை)

அன்றியும் சில இடங்களில் பிழைகள் நேர்ந்த விடத்து அப்பிழைகள் அடிக்கப் பெறாமலேயே திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. சான்று

யானைாய்	-	யா~ள~ை ய்	(55:2)
உடராணும்	-	உட~றா~ ம்	

ரகர ஒற்றுக்கும் 'ா' என்ற துணை வெழுத்துக்கும் வேறுபாடு பேணப்படவில்லை. மேலும் ஐகார உயிர்மெய்த் துணை யெழுத்தாகிய 'ை' என்பது 'ஐ' என்றவாறு மயக்கந்தரும் வகையில் எழுதப்பட்டுள்ளது. ரகர றகர மயக்கங்களும் நூலில் காணப்படுகின்றன.

உடராளும் - உடறாளும் (91:4)

பவமரு - பவமரு (5:2)

'நு' என்ற எழுத்து ஙு என்ற எழுத்தைப் போன்று எழுதப்பட்டுள்ளதால் இரண்டுக்கும் இடையே மயக்கத்தன்மை நிலவுகின்றது.

மேலும், மறவடிவாம் எனும் சொல் 'மறவுறுவடிவாம்' என்றவாறு மிகை எழுத்துக்களோடு பிழையாகக் காணப்படுகிறது. (32:1) 'அன்பாம்னன்றே', என்றவாறு நகர - ணகர வேறுபாடுகளும் பிற வேறுபாடுகளும் நூலின் ஆங்காங்கே காணக்கிடக்கின்றன.

ஆ
தெரோ வழி ஒற்றுமிகக் கூடாத இடங்களில் ஒற்று மிகுந்துள்ளது.

சாந்து
- - - -

பவளனீர்தற்ச் சடர்வால் என்ற தொடரில் றகர ஒற்று இடம் பெற்றுள்ளது. றகர வல்லொற்றை எழுத்து ஒற்று மிகுதல் கூடாது என்பது இலக்கண விதி. ஆனால் இங்கு, 'ற ் கர' ஒற்றை அடுத்துச் சகர ஒற்று மிகுந்துள்ளது.

ஒரொற்று மிக வேண்டிய இடத்தில் பிறிதோரொற்று இடம் பெறும் நிலையும் சிற்சில இடங்களில் காணப்படுகின்றன.

சுவடிப் பதிப்பில் நிகழ்ந்தவை

செய்யுளில் அடி மற்றும் சீர்கள் முறைப்படிப் பிரிக்கப்பட்டு உரிய வடிவில் தரப்பட்டுள்ளன. நூலின் கண் ஆங்காங்கே காணப்பட்ட பிழைகள் திருத்தப் பெற்றுள்ளன. ற, ண, ன, முதலானவற்றிடம் ஆகார உயிர் மெய் வடிவம் இக்காலச் சீர்திருத்த எழுத்து முறைக்கேற்பத் துணை எழுத்துப் பிரித்து எழுதப்பட்டுள்ளன. அவ்வாறே ல, ள, ண, ன ஆகியவற்றுடன் ஐகார உயிர் மெய் வடிவங்களும் இக்காலச் சீர்திருத்த எழுத்து வடிவில் தரப்பட்டுள்ளன.

நூலின் கண் உரை மிகவும் முயன்று எழுதப்பட்டுள்ளது. கூடிய வரையில் பிழையின்றி எழுதப் பட்டுள்ளன. எனினும் இடம் முயற்சியில் ஏதேனும் சிறு குறைபாடுகள் காணின் பிழை பொறுத்தருள்க.

பொது நிலை ஆய்வு

சிற்றிலக்கியங்கள்

தொடர்நிலைச் செய்யுள், 'பொருள் தொடர்நிலை', 'சொல் தொடர்நிலை' என இரு வகைப்படும். அவற்றைத் தண்டியாசிரியர் மேலும் விளக்கியுள்ளார். பெருங்காப்பியமும் சிறுகாப்பியமுமாக வரும் நூல்களைப் பொருள் தொடர்நிலை' என்கிறார். அந்தாதி, கலம்பகம் போன்றவற்றைச் 'சொல் தொடர்நிலை' எனப் பகுத்துள்ளார். பொதுவாக நோக்கின் பெருங்காப்பியம் ஒழிந்தவற்றைச் 'சிறு காப்பியங்கள்', 'சிற்றிலக்கியங்கள்' எனக் கொள்ளலாம். சிற்றிலக்கியங்கள் பிரபந்தம் என்ற பெயராலேயே பெரிதும் வழங்கப் பட்டுள்ளன.

பிரபந்த விளக்கம்

'பிரபந்தம்' என்பது 'நூல்' என்னும் பொருள் தரும் ஒரு வடசொல்; நன்றாகக் கட்டப்பட்டது என்பது இதன் பொருள். தமிழில் வழங்கும் யாப்பு, செய்யுள் என்பனவும் இக் காரணம் பற்றிப் பிறந்த பெயர்களே.

தமிழில் 'நூல்' என்பது எல்லா வகை நூல்களையும் சுட்டும் பொதுப்பெயராக இன்று வழங்கி வருகின்றது. ஆனால், பண்டை நாளில் இலக்கண நூல்களைச் சுட்டுவதற்கே இச் சொல் பயன்படுத்தப் பட்டது. இலக்கியம் என இப்பொழுது பேசப்படும் நிலையில் உள்ளவற்றைச் 'செய்யுள்' என்று குறித்தனர்; 'பாட்டு' என்னும் பெயராலும் வழங்கப்பட்டது.

செய்யுள் என்பது தனித்தனிச் செய்யுள் வகைகளையும் குறிக்கும்; பல பாக்கள் கொண்ட இலக்கியத்தையும் உணர்த்தும், பல பாக்கள் கொண்ட இலக்கியம் 'தொடர்நிலைச் செய்யுள்' என்றும் வழங்கப்பட்டது. 'கணக்கு' என்றும் பெயராலும் இலக்கியம் என்பது சுட்டப்பட்டது.

நிகண்டுகளில் சிற்றிலக்கியக் கொள்கை

தமிழ் நிகண்டுகளுள் பழமையானது நாற்பாணினால் அமைந்த திவாகரம் இ.பி. 9-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இதில் வரும் சில சிற்றிலக்கிய மரபுகள் கவனிக்கத்தக்கன.

ஒலி பற்றிய பெயர்த் தொகுதியில், சிற்சில நூல் வகைகளின் விளக்கம் அமைந்திருத்தல் காணலாம். அவையாவன: சந்தப் பாட்டு, தாண்டகம், நெடுமொழி, உயர்மொழிக் காஞ்சி, முது மொழிக் காஞ்சி, பேயர்காஞ்சி, பொருள்மொழிக் காஞ்சி, முது பாலை, குரங்கள், பாசறை முல்லை, இல்லான்முல்லை, வள்ளைப் பாட்டு என்பனவாம்.

இந்த நிகண்டின் இறுதிப் பகுதியாகிய 'பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி'யில், ஆண்பாற் பிள்ளைப் பாட்டு, பெண்பாற் பிள்ளைப் பாட்டு என்பவற்றின் இயல்புகள் நன்கு சொல்லப்பட்டுள்ளன. காவிய இயற்கை பற்றியும் இத் தொகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி எனப்படும் நால்வகைக் கவிகளின் இயல்புகளைக் கூறுமிடத்து வித்தாரகவி பற்றிய விளக்கத்தில் மும்மணிக்கோவை முதலிய சிற்றிலக்கியங்களைத் திவாகரர் சுட்டியுள்ளார்.

மும்மணிக் கோவையும் பன்மணி மாலையும்
மறமும் கலிவெண் பாட்டும் மடலூர்ச்சியும்
கிரீடையும் கூத்தும் பாசண்டத் துறையும்
விருத்தக் கவிதையும் இயலிசை நாடகத்தொடு
விரித்துப் பாடுவது வித்தார கவியே.

என்னும் திவாகரர் தரும் விளக்கத்தால், மும்மணிக்கோவை பன்மணிமாலை முதலிய பிரபந்தங்கள் அவர் காலத்திற்கு முன்பே இருந்தன என்பது தெளிவாம். தேவாரம், திவ்யப்பிரபந்தம் முதலிய பக்தி நூல்களில் சித்திர கவிகள், சந்தக் கவிகள் இடம் பெற்றுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகச் சிலப்பதிகாரத்தில், வரிப் பாட்டு, குரவைப் பாட்டு, அம்மானைப் பாட்டு வகைகள் இடம் பெற்று மக்களிடையே அவை மிக்கு வழங்கியமையையும் தெரிவிக்கிறது. திவாகர நிகண்டு தோன்றிய காலத்தை ஒட்டியே, பிரபந்த இயல்பு உரைக்கும் பாட்டியல் நூல்களும் பிறந்திருத்தல் வேண்டும். திவாகரத்திற்குப் பின்வந்த பிங்கல நிகண்டு முதலியவற்றிலும் இதுபோன்ற பிரபந்தம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

சிற்றிலக்கிய மரபு

புலவர் பெருமக்கள் எவ்வெவ் அடிப்படையில் எந்தெந்த முறைகளில் இலக்கியங்களை ஆக்கினார் என்பது கண்டால், அவர் படைத்த இலக்கிய வகைகளை நாம் இனம் பிரித்து அறியக் கூடும் வெவ்வேறு காலங்களில் புலவர் மரபாக வந்த இலக்கியக் கொள்கைகளும் அதன் வழி வெளிப்படும். இதற்குத் தொடர்நிலைச் செய்யுள் இலக்கணம் கூறும் நூல்களாகிய பாட்டியல் நூல்களைக் கால அடைவில் வைத்து ஆய்ந்து பார்த்தல் வேண்டும்.

பாட்டியல் நூல்கள்

வரலாற்று முறையில் ஆராய்ந்த அறிஞர்கள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டுத் தொடக்கமாக, தொடர்நிலையாக வரும் பாட்டுகளின் இயல்புகளை எடுத்து விளக்கும் நூல்கள் தோன்றின என்று கருதுகின்றனர். இவ்வகையில் நமக்கு இப்பொழுது கிடைக்கும் பழைய நூல் கி.பி. பத்தாம் நூற்றாண்டளவில் தொகுக்கப்பட்டது எனக் கருதப்படும் 'பன்னிரு பாட்டியலாகும்.

சிற்றிலக்கியம் தொண்ணூற்றாறு

சிற்றிலக்கியங்கள் 96 என்னும் வழக்கும் காணப்படுகிறது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் எழுந்த சிவந்தெழுந்த பல்லவன் உலாவில் தான் முதன்முதலாக

'... தொண்ணூற் றாறு
கோவைப் பிரபந்தங்கள் கொண்ட பிரானே'

என்று சுட்டப்பட்டிருக்கிறது.

'பிள்ளை கவிமுதல் புராணம் ஈறாத்
தொண்ணூற் றாறெனுந் தொகைதாம்'

எனப் பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியலும் கூறுகிறது. சைவதத்துவம் தொண்ணூற்றாறு என்பது போலப் பிரபந்தம் 96 என்னும் வழக்கும் எப்படியோ புகுந்துவிட்டது. சிலப்பதிகாரத்திலே 'பாசண்ட சாத்தன்' என வரும் தொடரில் உள்ள பாசண்டம் என்பதற்குத் 'தொண்ணூற்றாறு வகைச் சமய சாத்திரக் கோவை' என்று பொருள் உரைக்கிறார் அடியார்க்கு நல்லார். சமய சாத்திரத் தருக்கக் கோவை 96 வகை என்பது போலப் பிரபந்தங்களும் 96 எனக் கொண்டனர் போலும்.

96 பிரபந்தங்களின் போக்கினைத் தெளிவாக உரைத்தவர் வீரமாமுனிவரேயாவர். இவர் 1838-இல் அச்சிட்டு வெளிப்படுத்திய 'தொன்னூல் விளக்கம்' செய்யுள் மரபியலில் 96 பிரபந்தங்கள் இவையிவை எனச் சுட்டி விளக்கியுள்ளார். இவரே பின்னர் தாம் இயற்றிய 'சதுரகராதி'யிலும் உரைநடையாய்ப் பிரபந்தம் 96-இன் இலக்கணம் தந்துள்ளார். 96 என்னும் முந்திய வழக்கிற்கு ஓர் உருக் கொடுத்து நடையாட விட்டவர் இம் முனிவரேயாவர்.

தெய்வப் பாமாலை

தொல்லூற்றாறு வகையாகப் பகுத்த பிரபந்தப் பாகு பாட்டிலும் தெய்வம் பற்றியவை மிகுதியேயாம். சிறப்பாக 'மாலை' ஐ முடிவுறும் பிரபந்தங்களுள் பலவும் தெய்வப் பாமாலைகளேயாம்.

அங்கமாலை, இணைமணிமாலை, இரட்டைமணிமாலை, உற்பவ மாலை, காப்பு மாலை, நவமணிமாலை, நான்மணிமாலை, மணிமாலை, மும்மணிக்கோவை, மும்மணிமாலை, வருக்க மாலை முதலியன தெய்வப் பாமாலைகளே. இவற்றுள் குறிக்கப்பட்ட மணிகள் பாமணிகளே. பல்வேறு பாக்களையும் கலந்து கோப்பதனால் அவற்றிற்கு வெவ்வேறு பெயர்கள் அமைகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இடைக்காலம் என்று குறிப்பிடப்படும் காலக்கட்டம் சிற்றிலக்கியங்களின் செல்வாக்கு மிகுந்ததாகும். ஈண்டு 'சிறு' என்னும் அடைமொழி அடிவரையறையைக் கருத்திற் கொண்டு அமைந்ததேயாம். பன்னீராயிரம் பாடி கம்பன் போன்றோரின் இலக்கியங்களுக்கு மத்தியில் சில நூறு பாடல்களுக்குள் அமைந்த இலக்கியங்கள் இந்நோக்கிலேயே சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன.

அளவிற் சிறுத்த இவை பொருளடக்கத்திலும் ஓசை நயத்திலும் சிறந்து விளங்கின. குறிப்பாக சிற்றிலக்கியங்களின் சந்தங்கள் பல சிறந்தனவாகவும் சுவை பயப்பனவாகவும் விளங்குகின்றன.

சிற்றிலக்கியங்கள்

தொன்னூற்றாறு என்ற வரையறை

சிற்றிலக்கியங்கள் தொன்னூற்றாறு என்று பிற்காலத்தில் உருவான பாட்டியல்கள் காட்டும்.

பன்னிரு பாட்டியல் 62
வெண்பா பாட்டியல் 55
நவநீத பாட்டியல் 53
சிதம்பர பாட்டியல் 63
முத்து வீரியப் பாட்டியல் 90
பிரபந்த மரபியல் 96
பிரபந்த தீபிகை 96
சதுரகராதி 96
தொன்னூல் விளக்கம் 96

என்பன பாட்டியல்களும் அவைகாட்டும் சிற்றிலக்கிய நூல்களின் எண்ணிக்கையாகும்.

பிரபந்த மரபியல் தான் முதன்முதலாக தொண்ணூற்றாறு என்ற வரையறையைக் காட்டுகின்றது. மற்றவற்றின் காலமும் கி.பி. பதினெட்டுக்குப் பிறகுதான். சில பத்தொன்பதின் தொடக்கத்திலும் தோன்றியுள்ளன ஆனால் அந்த நிலையானது

"தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள்
கொண்டபிரான்"

என்று பதினேழாம் நூற்றாண்டு இலக்கியத்திலேயே இடம் பெற்றுவிட்டது.

தொண்ணூற்றாறு என்ற வரையறை பொருந்துமா?

தொண்ணூற்றாறு என்ற வரையறை அவ்வளவு சரியானதாகத் தெரியவில்லை. இதற்கான காரணங்கள் நான்கு என்று கூறலாம்.

1. வகைப்பாட்டில் சிக்கல்கள் ஏற்பட்டு, நூல்களுக்குள்ளும் தமக்குள்ளேயே மாற்றங்கள் நடைபெறுகின்றன.
2. தொண்ணூற்றாறுக்குள் அடங்காத பல நூல்களுக்குப் பாட்டியல் நூல்கள் இலக்கணம் கூறுகின்றது.
3. தொண்ணூற்றாறுக்குள் அடக்கப்பட்ட பலவற்றிற்கு பாட்டியல் இலக்கணங்கள் இலக்கணம் கூறவில்லை
4. தொண்ணூற்றாறுக்கு மேற்பட்ட பல நூல்கள் இன்று தோன்றி நிலைபெற்றும் விட்டன.

இதே காரணங்களை முன்னிறுத்திப் பார்க்கும்போது பாட்டியல் களும் தொன்னூற்றாறு என்ற வரையறைப் பொருந்தாது என்பது உறுதியாகி விட்ட ஒன்றாகி விட்டது.

மாலை இலக்கியம்

இச்சிற்றிலக்கியம் இலக்கிய வகைகளுள் மாலை இலக்கிய வகையும் ஒன்று.

பூமாலை கொண்டு கடவுட் திருமேனியிற் புனைவது போல அன்பர்கள் பாமாலை சூட்டிப் பரமனை வழிபடுதல் வழிவழி வந்தமரபாகும் இதனை,

"தொடுக்கும் கடவுட் பழம்பாடல்"

"கோதை சொல்லும் தூய தமிழ் மாலை"

"பாமாலை கொண்ட திருவெங்கை வாணர்"

என்னும் தொடர்களால் அறியலாம்.

மலர்கள் கோத்துத் தொடுக்கப்பட்டதை மாலை என்கிறோம். அதுபோல, சொற்களைக் கோத்துத் தொடுக்கப்பட்டவையே மாலை வகை இலக்கியங்களாகும்.

பாட்டியல் நூற்கள், பொருள், யாப்பு, எண்ணிக்கை போன்ற அடிப்படைகளில் மாலை நூல்களை வகைப்படுத்தித் தருகின்றன. பொருளானும் அடியானும் வேறுபடுநவைமாலை என்ற பெயர் நிலையில் ஒப்புமைப்படுகின்றன.

பொருள் நிலை மாலைகள்

நாமமாலை, புகழ்ச்சி மாலை, பெருமகிழ்ச்சி மாலை தாரகை மாலை, செந்தமிழ் மாலை, அங்க மாலை, தானே மாலை அனுவாத மாலை போன்றன பொருள்நிலை மாலைகளாகத் திகழ்கின்றன.

மேலும், வெட்சி மாலை, கரந்தை மாலை, வஞ்சி மாலை வாகை மாலை போன்றன புறத்திணை பற்றியமைந்த புறப்பொருள் மாலைகளாம்.

யாப்புநிலை மாலை

வெண்பா மாலை, வஞ்சி மாலை போன்றன யாப்பு நிலையால் பெயர் பெற்ற மாலை இலக்கியங்களாகும்.

எண்ணிக்கை நிலை மாலை

யாப்பு விரவு நிலையில் இணைமணி மாலை, இரட்டை மணி மாலை, நவமணி மாலை, போன்றன எண்ணிக்கை அடிப்படையில் அமைந்த மாலைகள்.

பாட்டியல் காட்டும் மாலை

பன்மணி மாலை, இரட்டை மணிமாலை இணைமணிமாலை, உருக்கமாலை, மும்மணி மாலை, நான்மணிமாலை, நவமணிமாலை, பல்சந்தமாலை, அங்க மாலை, மகிழ்ச்சி மாலை, நாமமாலை, கைக்கிளை மாலை,

அநுராக மாலை, தானைமாலை, வஞ்சி போன்ற ஒரு மாலைகள், தாரகை மாலை, காப்பு மாலை, கோயில் மாலை, மணி மாலை, மெய்க் கீர்த்தி மாலை, வேனில் மாலை கலம்பக மாலை, செந்தமிழ் மாலை, போன்ற முப்பதுக்கு மேற்பட்ட மாலைகளைப் பட்டியல் போட்டு ~~அமைந்திற்கான~~ அமைந்திருக்கின்ற இலக்கணங்களைக் காட்டி நிற்கின்றன பாட்டியல் நூல்கள் இந்த மாலைகள் பட்டியல் எல்லா பாட்டியல் நூல்களிலும் எழுதப்பட்ட ஒன்றாகும்.

மாலை வகைகளும் இலக்கணங்களும்

மாலை வகைகளைக் காட்டி அமைந்திற்கான இலக்கணங்களைக் காண்போம். அவற்றை அகர முறையில் காண்பது வகைப்பாட்டிற்கு எளிதெனக் கருதி அவ்வாறு செய்துள்ளேன்.

அங்க மாலை

~~ஊரட~~ புரட எடுத்துக்கொண்ட பொருள் பெயர்கள் அங்க வகையை விளம்புவது விருத்த யாப்பு வழி விளக்குவது - வாழ்த்துவது அங்க மாலை என்று அழைக்கப்படும்.

அநுராக மாலை

பாங்கற் கூட்டம் புணர்ந்த தலைவனின் கனவின் இன்பத்தை எடுத்துக்காட்டுவது அநுராக மாலை எனப்படும்.

இணைமணி மாலை

வெண்பாவும், கலித்துறையும் தம்முள் இயைந்து வர அந்தாதியாய் நூறு பாடல்கள் கொண்டு பாடுவது இணைமணி மாலை எனப்படும்.

இரட்டை மணிமாலை

வெண்பா முன்னாகவும் கலித்துறை பின்பாகவும் அமைய, அந்தாதித் தொடை அமையப்பெற்றதாய் இருபது பாடல்கள் கொண்டது இரட்டை மணிமாலை என்று அழைக்கப்படும்.

கலம்பக மாலை

முதலில் வரும் ஒருபோகும், அம்மானையும் நீக்கி மற்ற உறுப்புகளை புகுந்த அந்தாதித் தொடை அமையப் பாடுவது கலம்பக மாலை என்பர்.

கரந்தை மாலை

நிரைகொள்ளும் வெட்சியாரைத் தவிர்க்கும் பண்புரிதல் கரந்தை மாலை எனப்படும்.

காஞ்சி மாலை

மாற்றார் பால் செல்லும் வஞ்சித்திணையைத் எதிர்த்து நிற்றல் காஞ்சி என்று உரைக்கப்படும்.

காப்பு மாலை

வெண்பாவும், கலிப்பாவும் அமைய இருபது பாடல்களில் தன்னைக் காக்குமாறு வேண்டிப் பாடுவது காப்புமாலை என்றழைக்கப்படும்.

கைக்கிளை மாலை

ஆடவரும், மகளிரும், பொருந்தும்படி வருகின்ற அறிவு மயக்கத்திற்குக் காரணமான, ஒருதலைக் காமமான பொருள் பற்றிப் பாடப்படும் இலக்கிய வகையாகும்.

கோயில் மாலை

வெண்பாக்களைத் தொகை அமைய இறைவனையோ, அல்லது இறைவன் தலங்களையோ சிறப்பித்துப் பாடுவது.

செந்தமிழ் மாலை

எந்தப் பொருளைப் பற்றியும் இருபத்தேழு பாடல்களைக் கொண்டு பாடப்படுவது செந்தமிழ் மாலை எனப் பெயர் பெறும்.

தாரகை மாலை

தாரகை இருபத்தேழும், சொல்லணியில், வைத்துப்பாடுவது தாரகை மாலை எனப்படும்.

தானை மாலை

தானையின், நிலை அளவு, பெருமை சிறப்பு போன்ற பலவற்றை விரித்துப் பாடுவது தானை மாலை எனப்படும்.

தும்பை மாலை

வெண்பா முன்பாக, கலித்துறை பின்பாக அந்தாதியாய் இருபது பாடல்கள் அமையப்பாடுவது. அதில் போரிடுதல் நிலைமை பற்றிப் பேசுவது தும்பை மாலையாகும்.

நவமணி மாலை

நால்வகைப் பாக்களும் மூவகையான பிற இனங்களும் கலந்து பாடப்படும். ஒன்பது பாடல்கள் நவமணி மாலை என்றழைக்கப்படும்.

நாமமாலை

எழுத்து, அசை, பா, பாவினம் போன்றவற்றில் மயக்கமடைந்த அடிகளில் புகழைப்பாடுவது நாமமாலை எனப்படும். வெண்பாவைச் சிறப்பித்துப் பாடுவது புகழ்ச்சி மாலை எனப்படும்.

நான்மணி மாலை

வெண்பா, கலித்துறை, ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம் ஆகியன கலந்து நாற்பது பாடல்களை அந்தாதியாய்ப் பாடுவது நான்மணி மாலை என்றழைக்கப்படும்.

பல்சந்த மாலை

கலம்பகத்தில் சொல்லப்பட்ட உறுப்பு வகைகளை நீக்கிப் பல்வகை நிலையிலமைந்தச் சந்தங்களால் பத்துப் பத்துப் பாடல்கள் நூறு அமையப்பாடுவது பல சந்த மாலை எனப்படும்.

பன்மணி மாலை

பலவகையான பாக்களால், வெண்பாவும் கலித்துறையும் அமைய நூறு பாடல்களால் பாடுவது பன்மணிமாலை என்றழைக்கப்படும்.

பாடாண் மாலை

பாடப்படுகின்ற ஆண் மகனின் வெற்றி, கொடை, வீரம் போன்ற பண்புகளைப் புகழ்ந்து பாடுவது பாடாண் மாலை எனப்படும்.

மணிமாலை

நால்வகைப்பா, பலவகையான பாவினம் அமைய நூறு பாடல்கள் பாடுவது மணிமாலை என்று பெயர் பெறும்

மகிழ்ச்சி மாலை

மகிழ்ச்சி நிலையை விவரித்து, நாற்பது பாடல்களில், வெண்பா, கலித்துறை இடம் பெறப்பாடுவது மகிழ்ச்சி மாலை எனப்படும்

மும்மணி மாலை

வெண்பா, கலித்துறை, ஆசிரிய விருத்தம் மூன்றும் கொண்டு அந்தாதி அமைப்பில் முப்பது பாடல்களால் பாடப்படுவது மும்மணி மாலையாகும்.

மெய்க்கீர்த்தி மாலை

நான்கு சீர்கள் உடைய அடிகளால், இரண்டடித் தொடைகளால் மன்னவனது புகழ் எல்லாவற்றையும் சொல்லி இறுதியில் அவனது வரலாறு போன்றவை கூறி அவனது தேவியை வாழ்க என்று சொல்லி அம்மன்னன் சிறப்புகளைக் கூறி வாழ்த்துவது மெய்க்கீர்த்தி மாலை எனப்படும்.

வஞ்சி மாலை

மாற்றான் மீது படையெடுத்துச் சென்று தாக்குதலைப் பாடுவது வஞ்சி மாலை எனப்படும்.

வருக்க மாலை

உயிர் பன்னிரண்டு, மெய் மொழி முதல் எழு அமையப் பாடப்படுவது வருக்க மாலை எனப்படும்.

வாகை மாலை

போர்க்களத்தில் படையெடுத்துச் சென்று வாகை சூடுதலைப் பாடுவது வாகை மாலை எனப்படும்.

பிற மாலைகள்

பாட்டியல் கூறும் இப்பல்வகை மாலைகள் போன்றே தமிழிலக்கியத் தொகுதியுள் மேலும் பலவகையுள்ள மாலைகள் காணப்படுகின்றன. பக்தி மாலையும், புகழ் மாலையும் தமிழில் மிகுதியாகவுள்ளன.

அல்லி அரசாணி மாலை, புலந்திரன் களவு மாலை போன்ற கதைப்பாடல்களும் மாலை என்னும் பெயரியதாய் இலங்குகின்றன.

அணிநிலை பொருந்திய மாலைகளாகச் சிலேடை மாலை, அந்தாதி மாலை, சித்திரகவி மாலை போன்றவையும் அமைகின்றன.

மாலைக்காலம்

மாலை என்னும் பெயரியதாய் விளங்கும் முதல் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திணைமாலை நூற்றைம்பதாகும். எனும் சிற்றிலக்கிய வகைமையில் தோன்றிய முதல் மாலை காரைக்காலம்மையரால் பாடப்பட்ட இரட்டை மணி மாலையாகும். இதன்காலம் கி.பி. 5,6 ஆம் நூற்றாண்டாகும். வருக்க மாலை என்னும் பழைய நூல் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. எண்ணடிப்படையில்

அமைந்த பல நான்மணி மாலைகளுள் மிகவும் பழமையானது
10-ஆம் நூற்றாண்டில் பட்டினத்தார் பாடிய கோயில் நான்மணி மாலை. இதன் பின்னர் பல்வேறு மாலைகள் பல்கிப் பெருகின.

மணிமாலை

மலர்மாலை, முத்துமாலை, மணிமாலை, இரத்தின மாலை, வைரமாலை என மாலைகள் பலவகையின உள்ளன. இவற்றுள் மணிமாலை சிறந்ததாகும். மன்னர் முதலியோரே இதனை அணியும் பெற்றியராகத் திகழ்ந்தனர். மேலும் நன்னூலார் 'ஒத்து' என்னும் யாப்பு வகை பற்றிக் கூறுகிறார்

நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை ஒருபுடை வைத்தல் ஓத்
ஓத்தென மொழி உயர்மொழிப் புலவர்.

(பவணந்தி முனிவர் நன்னூல் காண்டிகை பாயிரம்
நூ. 16, கழக வெளியீடு 1972)

என்பார் உயர்ந்தவற்றையே உவமையாகச் சொல்லும் பாங்கினடிப்படையில் மணிமாலையே உயர்ந்ததென அறியலாம்.

இக்காரணம் பற்றியே கோவை மாலை முதலிய இலக்கியங்களைப் பாடுங்கால், மும்மணிக்கோவை, நான்மணி மாலை எனப் பெயரிட்டழைத்தனர்.

சிறப்பு நிலை ஆய்வு

ஆசிரியர் வரலாறு

பதினேழாம் நூற்றாண்டில் செவ்விய மதுரம் சேர்ந்த நற் பொருளில் சீரிய கூரிய செந்தமிழ்ப் புலவர் இருவர். ஊமைப் பிள்ளையிருந்து உமையாள் மைந்தனின் அருளால் பேசிய குமரகுருபரர் ஒருவர். சான்றோருடைத்தான தொண்டை மண்டலத்தில் தோன்றிக் கவிக்கடலாகத் திகழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் மற்றொருவர்.

ஐம்பூதத் தலங்களுள் ஒன்றான மண்தலம் என்று போற்றப்படும் கச்சியம் பதியில் குமாரசாமிப் பண்டாரத்தின் பிள்ளையார் சிவப்பிரகாசர் பிறந்தார்.

இளமையிலேயே தந்தையை இழந்த இவர் இலிங்க தாரணம் செய்த வீர சைவரானார். திருவண்ணாமலையில் குருதேவர் என்பாரிடம். தமிழ் கற்றார். சோணாசல மாலை பாடினார்.

திருநெல்வேலி சென்று சிந்துபூந்துறையில் வாழ்ந்த தருமையாதீன வெள்ளியம்பலத் தம்பிரானிடம் பாடம்கேட்க எண்ணினார். இவருடைய தகுதியுரைத் தம்பிரான், முதலில் 'கு' இடையில் 'ஊருடையான்' முடிவில் 'கு' வர வெண்பா பாடுமாறு பணிக்க சிவப்பிரகாசரும்,

> குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
> முடக்கோடு முன்னமணி வாற்கு - வடக்கோடு
> தேருடையான் றெவ்வுக்குத் தில்லைக்கோன் மேற்கொள்ள
> ஊருடையான் என்று முலகு.

ணைப் பாடினார். இப்பாடலைக் கேட்டு மகிழ்ந்த தம்பிரான், அவரைப் பாராட்டி மாணவராக ஏற்றுக் கொண்டார்.

காணிக்கையாகத், தம்மை மதியாத தருக்கினராயும் புலவரொருவரை வென்று வருமாறு கேட்டார். சிவப்பிரகாசர் திருச்செந்தூர் சென்று அப்புலவரைப் போட்டிக் கழைத்து நிரோட்ட யமக வந்தாதி பாடி முடித்தார்.

வாயின் இதழ் குவியாமல் (ம, ப, வ எனும் எழுத்துக்களைத் தவிர்த்து) பாடுவது நிரோட்டகம். "முதலெழுத்து தவிர மற்றெல்லாம் ஒன்றிவரப் பாடுவது யமகம்". "அந்தம் முதலாகத் தொடுப்பது அந்தாதி". இம்மூன்று இலக்கணங்களையும் பெற்றது நிரோட்டக யமக வந்தாதி.

திருச்செந்தூர் முருகக் கடவுள் மீது "நிரோட்டக யமக அந்தாதி" முப்பது கட்டளைக் கலித்துறை பாடி முடித்தார். அப்புலவரோ ஒரு செய்யுளேனும் பாட முடியாமையை உணர்ந்து சிவப்பிரகாசரை வணங்கி விண்ணப்பம் செய்ய, அவரை துறைக்கு அழைத்து வந்து தம்பிரான் சுவாமிகளுக்கு அடிமையாக்கி விட்டார்.

துறை மங்கலம் திரும்பிய சிவப்பிரகாசர் அண்ணாமலை ரெட்டியாருக்கு அருள் புரிந்து அவர் திருவெங்கை நகரில் தமக்காக அமைத்துதவிய திரு மடத்தில் வீற்றிருந்து அப்பதிப் பழமலைநாதர் மீது திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கை உலா, திருவெங்கை அலங்காரம் என்னும் நான்கு நூல்களை இயற்றினார்.

தம் நண்பர் அண்ணாமலை ரெட்டியாருடன் சிதம்பரத்திற்கு எழுந்தருளி. அங்கே ஒரு திருமடம் கட்டுவித்து அதிலிருந்து கூத்த பிரானை வழிபட்டுக் கொண்டு சிவப்பிரகாசர் விகாசம், தருக்கபரிபாஷை சதமணிமாலை, நால்வர் நான்மணிமாலை ஆகிய நூல்களை இயற்றினார். காஞ்சியில், பிரபுலிங்கலீலை, வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி, விருத்தகிரியில் பழமலை அந்தாதி, பிக்ஷாடன நவமணிமாலை, கொச்சகக் கலிப்பா, பெரிய நாயகியம்மை திருவிருத்தம், பெரிய நாயகியம்மை கலித்துறை நல்லார் நூல் அபிடேக மாலை, நெடுங்கழிநெடில், நிரஞ்சனமாலை, கைத்தல மாலை, பாடினார். இவ்வாறாகக் கிட்டத்தட்ட 34 நூல்களை இயற்றியுள்ளார்.

இவர்தம் இலக்கியப் பணிகளில் சிறப்புடையதாக இலங்குவது பிரபுலிங்கலீலை கற்பனை நயமும் சொற்பொருள் நலனும் மிக்கது.

நீதிநூல் வரிசையில் வைத்துப் போற்றத்தக்கதாக நன்னெறி எனும் நூல் விளங்குகிறது.

வீரமாமுனிவர் கிறித்தவத்தின் பெருமை கூறிப் பலரைத் தம் மதத்தில் ஈர்த்துச் சேர்த்த நிலை கண்டு வெகுண்டு அவரைக் கண்டிக்குமாற்றான் ஏசுமத நிராகரணம் பாடினார். பல தனிப் பாடல்களும் பாடினார்.

இவருடைய நூல்கள் சித்தாந்தம் வடமொழி, ஆகமம், தருக்கம், காவியம், வேதாந்தம், அகப்பொருள், சோதிடம் எனும் பல துறைக்கண் புத்தம் புதிய கருத்துகள் விரவிய இவ்வோசை திருமுறைவழுவு கொண்டொளிர்வன.

சிவநேசச் செல்வராகச் சில நாள் வாழ்ந்த தம் முப்பத்தி இரண்டாம் ~~பிரண்டாம்~~ யாண்டில் கன்னித்திங்கள் நிறையுவா நாளில் பரசிவலிங்கத்தில் கலந்தருளினார்.

"சனிகொள் சங்கத் தமிழ்க் குழவிக்கொரு
செவிலி என்ற சிவப்பிரகாசனே"

எனும் மொழிக்கிணங்க இவர் வாழ்ந்த பெருவாழ்வு, தமிழும் சைவமும் கலந்த திருவாழ்வாகும். இவ்விரண்டும் உள்ளவரை இவர் பெயர் நிலைபெற்றிருக்கும்.

சதமணி மாலையை இயற்றியவர் இச் சிவப்பிரகாசரே என்பதை நூலின் ஏன் காறும் ஆகச் சான்று உறுதி படுத்துகின்றது. நூலின் நூறாவது பாவான இறுதிப் பாடல் "இக் குற்றமற்ற சதமணி

மாலையை உலகம் விரும்பும் வண்ணம்
புகன்று உரைத்தவன் சங்கம் தோற்றிய
தமிழ் மொழியாகிய குழவிக்குச் செவிலி
என விளங்கும் சிவப்பிரகாசன் ஆவான்.

என்று குறிப்பிடுகின்றது.

காலம்

முப்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து[1], தமிழுக்கும் வீர சைவ சமயத்துக்கும் தொண்டு புரிந்த இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டு எனலாம்[2]. இலக்கிய வரலாற்றாசிரியரான பூர்ணலிங்கம் பிள்ளை மடங்களின் காலப் பகுதியில் (1350 - 1600) திருமங்கலம் வீரசைவ மடத்தின் வரலாற்றில் இவரையும் கூறுகிறாரேயன்றி கால ஆராய்ச்சிக்கு சிவப்பிரகாசரைப் பற்றிக் குறிப்பிடும் போது அடைப்புக் குறிக்குள் 1652' எனும் ஆண்டைத் தருகின்றார்.[4] சுவாமிகள் பிறந்த ஆண்டாகவோ அன்றி வாழ்ந்த காலமாகவோ இதனைத் தருகின்றார் என விளக்கவில்லை.

சுவாமிகள் பாடிய திருவெங்கைக் கோயில், சாலிவாகன சகாப்தம் 1545 ஆம் வருடம் (கி.பி. 1623) கட்டப்பட்டது என்பதால் அவர் அங்கு வாழ்ந்தகாலம் இதற்குப் பிற்பட்டது எனத் துணியலாம். அடிகளியற்றிய பதினாறாவது நூலான பிரபுலிங்க லீலையின் காலத்தைத் துணிய,

பார்கெழு சகாத்த மூவைஞ் நூற்றெழு பானான் கால
தாங்கு கர நாமங்கொ ளாண்டு ஆடை ஞாயிற்றிற்
சீர்கெழு மல்ல மன்றல் திருவிளை யாடற் காதை
கார்கெழு குடந்தைக் கோமான் கருணை கொண்டியம்பி னானே

(பிரபு - மான்மிய - 23)

என்ற பாடல் உதவுகின்றது.

அந்தமயின் ஈற்றில் நூற்பயனும், காலமும், வாழ்த்துமாகி வரும் பகுதியில் இப்பாடலும் இடம் பெறுகின்றது. 1574 என்ற இதன் ஆண்டு கி.பி. 1652ஐக் குறிக்கின்றது. எனவே கவிஞரின் வாழ்வுக் காலத்தில் இவ் ஆண்டும் உட்படுகின்றது. பொதுவாக, இவர் காலத்தைப் பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என இக் குறிப்புகளிலிருந்து தேர்ந்து கொள்ளலாம். ஆயின், ஏசுமத நிராகரணம் என்ற இவரது நூல், வீரமாமுனிவரை மறுத்து எழுதப்பட்டது என்பதால், முனிவர் இங்கு வாழ்ந்த காலமான பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் (1711 - 1747) இவர் வாழ்க்கைப் பகுதியாக, கால எல்லை வரையறுக்க இயலாத சிக்கலைத் தருகின்றது.

சுவடி - காலம்

சுவடியின் கண் இறுதிக்குறிப்பு இந்நூலைப் படியெடுத்த ஆண்டு ஸ்ரீமுக வருடம் பங்குனி மாதம் 25 ஆம் தேதி ஆதிவாரம் சதுர்த்தசி திதி என்று குறிப்பிடுகின்றது. எனவே, இச்சுவடி எழுதி முடிக்கப் பெற்ற நாள் 1873 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 தேதி என்பது தெளிவு. இச்சுவடியைப் படி எடுத்தவர் காஞ்சிபுரம் பிள்ளை பாளைய மகாவீர சுவாமிகள் என்பது உரைக்குறிப்பால் பெறப்படுகின்றது.

நூல் ஆய்வு

உலக உயிர்கள் யாவும் இன்பத்தையே நாடுவன. அவ்வின்பத்தைப் பெற அவ்வுயிர்கள் மேற்கொள்ளும் வழிமுறைகள் பல. அவ்வழிகள் யாவும் அவரவர் அறிவு நிலைக் கேற்பவே அமைகின்றன. அவையே சமயங்கள் எனப்படுகின்றன. ஒவ்வொரு சமயமும் தமக்கெனத் தனியொரு உண்மையைப் பொருளாகக் கொண்டிலங்கும். பதி, பசு, பாசம் என்கிற மூன்றுமே சமயங்களால் பேசப் பெறும் முத்தத்துவங்கள். இம்மூன்றின் உண்மையையும் இலக்கணத்தையும் எடுத்தியம்பி முடிவாக, தர்க்க நெறியில் ஆய்ந்து உயிர் பெறுதற்குரிய இன்பத்தின் உயர் நிலை, அதற்குத் தடையாக இருக்கின்ற உலக இயற்கை ஆகியவற்றை விளக்கி அவ்வின்பத்தைப் பெறுதற்குரிய கருவிகளை எடுத்தியம்புவது சைவ சமய நெறியாகும்.

சைவ சமயத்தின் கடவுள் சிவன் ஆவான். இச்சைவம் இறைவனை உண்டருளியது. எனவே, சிவன் தொடர்பாகவே சைவம் எனப் பெயர்பெற்று வழங்குகின்றது. இச்சமயம் கூறுகின்ற உயிர்க்குறுதியான தனிப் பொருள்களே சித்தாந்தம் எனப் பெறுகின்றன.

சைவ சித்தாந்தத்தைத் தெளிவுறுத்துகின்ற ஆன்ம நூல்களும் சாத்திரங்களும் தோத்திரங்களும் மிகப் பல. தேவாரம் முதலாக

விளங்கும் பன்னிரு திருமுறைகளும் தோத்திரப் பாக்களாக அமைந்து சைவத்தை நன்கு விளக்குகின்றன. அவ்வாறே சிவஞான போதம், சிவஞான சித்தியார், சித்தாந்த அட்டகம், திருவருட் பயன் முதலான சாத்திர நூல்கள் சைவ சித்தாந்தத்தையே பொருளாகக் கொண்டவை அவ்வகையில் சைவ சமயத்தில் ஆகம நூல்கள் பற்பல. அவற்றுள் ஆய்ந்து அரிய உண்மைகளைத் தொகுத்து உரைக்கப் பெற்ற நூலே சதமணி மாலை ஆகும்

இதனை,

"பரம நூல்கள் பலவுளர் தேர்ந்துதேர்ந்
தருமை ஞான மறியத் திரட்டிய
பெருமை நூலின் பெரும்பொருள் கொள்ளவெங்
கருமத் தானதி காரிய லானரோ"

என்ற பாடலால் அறியலாம்.

மேலும் நூலின் கண் ஆங்காங்கே, மறையோடாகமை நூல் வல்லோர் (14:4)

தகவுளர்க வென விளம்புஞ் சைவ மெனப்படு நூலே (20:4)

ஆகம நூனெறி கண்டார் (22:4)

சைவ தந்திர முணர்ந்திருப்போர் (38:4)

முச்சுடர் வழிவுடை முதல்வ னாகமம் (48:4)

பாகுமென் மொழியமர் பாக னாகமம் (54:4)

~~செச்சையணாய் பகவனூ~~லே (74:4)

அப்பர னருளிய ஆக மங்களே (76:4)

அரவணி சடைநூல் அறையு மெய்யவே (85:4)

என்ற வழி சைவ ஆகமங்கள் மற்றும் அவ்வாகம நெறி நின்றோர் வழியே இந்நூல் உருவானது என்பது பெறப்படுகிறது.

இந்நூல் சிவாகம நெறியில் அமைந்துள்ளமையால் இதன் கண் கூறப்பட்டுள்ள பொருள்கள் அவ்வாகம நெறிக்குரிய சூத்திரப் பொருள்களாக விளங்குகின்றன அவை:

சுயம்பு சூத்திரப் பொருள் 2, 3, 33-35

மிருகேந்திர சூத்திரப் பொருள் 4, 11, 14, 16-23, 27, 29, 31, 32, 36-38, 48-50, 57-58, 71, 74

பார்க்ய சூத்திரப் பொருள் 5, 8, 15, 42, 43, 46, 74, 65, 66

மதங்க சூத்திரப் பொருள் 6, 9, 10, 59-61, 76, 77, 79

விசுவசாரோத்திர சூத்திரப் பொருள் 7, 24-26, 30

காரண சூத்திரப் பொருள் 12, 13

கிரண சூத்திரப் பொருள் 28, 39-41, 44, 68, 69 93-95

சுவாயம்புவ சூத்திரப் பொருள் 45, 51-56, 62, 75, 80, 83-86, 92

சருவாஞ் ஞானோத்தரப் பொருள் 63

நிசுவாச சங்கிதா சூத்திரப் பொருள் 67, 82

காலோத்திர சூத்திரப் பொருள் 73,

தேவியாமத சூத்திரப் பொருள் 78, 96, 97

தேவிகாலோத்திர சூத்திரப் பொருள் 87

என்பன அச் சூத்திரப் பொருண்மைகளாகும்.

சைவ ஆகம நெறிகள் கூறும் சித்தாந்தக் கருத்துகளைச் சிவ ஞான போதம் பன்னிரு சூத்திரங்களில் பகுத்துக் காட்டுகின்றது. அவையாவன 1. பதியுண்மை 2. பாசவுண்மை 3. பசுவுண்மை 4. பசு இலக்கணம் 5. பாச இலக்கணம் 6. பதி இலக்கணம் 7. ஆன்மாவின் சிறப்பிலக்கணம் 8. ஞானத்தின் உணரும் முறை 9. ஆன்ம சுத்தி 10. பாசம் நீக்க உணர்த்தஷார் 11. சிவப் பேறு 12. அணைந்தோர் தன்மை ஆகியன

இவ்வாறு சைவசித்தந்தக் கருத்துகளைத் தெளிவுறுத்து நிலையில் சிவஞான போதம் முதலானவற்றோடு இச்சதமணி மாலையும் சீரியதோர் ஆன்மத் தெளிபொருள் நூலாக விளங்குகின்றது.

நடை

நூலின் நடை மிக்க இனிய நடையில் அமைந்துள்ளது. மிக அரிய ஞானக் கருத்துக்களை எளிய முறையில் விளக்குகின்றது. எனினும் சைவ ஆன்ம நெறியில் நின்று விளக்குதலின் இதன் கண் வடமொழிச் சொற்கள் பல இடம் பெற்றுள்ளன. எனினும் அவ்வட சொற்கள் யாவும் தமிழுக்கேற்ப ஒலிமாற்றம் பெற்று விளங்குகின்றன.

நூலுள் ஓர் வடமொழி எழுத்தும் இடம் பெறாமை குறிப்பிடத் தக்கது; பாராட்டுதற்குரியது.

காட்டு :

தீட்சை	-	தீக்கை	(1:3)
சக்தி	-	சத்தி	(9:1)
சிற்பரம்	-	சிதாகாசம்	(9:2)
சூட்சுமம்	-	சூக்குமம்	(25:2)

மேலும் சுத்தம், அசுத்தம், பரிணாமம் என்றின்ன வட சொற்கள் மருந்து காணப்படுகின்றன.

வடசொற் பயன்பாடு மட்டுமன்றி, பேச்சுவழக்குச் சொற்களும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

சான்று

ஒருவர்	-	ஒருத்தர்	(8:2)
பின்தொடரும்	-	பின்றுடருத்	(22:2)
தொடர்ந்து	-	துடர்ந்து	(24:2)

அணிகள்

நூலில்கள் அழகிய உவமைகள் கையாளப் பெற்று நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

சான்றாக, இவ்வுயிரானது புவியில் பாசத்தில் அழுந்தியுள்ளதால் மோசத்துயில் கொண்டு இறைவனை அறியாமல் இறைவனுக்கு முன்னே உறங்குகின்றது. இறைவன் அவ்வுயிர்க்கு உரிய முறையால் உணர்த்தி மோசத் துயில் நீக்குவான் இதனை ஆசிரியர் மின்னு கின்ற

மாணவனை அவ்வாசிரியர் கோல்கொண்டு உணர்த்தித் துயில் நீக்கும் இயல்பான நிகழ்ச்சி உவமையாக்கப் பட்டுள்ளது. (பா. 68) இவ்வுவமை போல என்பதும் என்னும் உவம உருபு இன்றி ~~அமைந்த~~ எடுத்துக் காட்டு உவமையணியாகத் திகழ்கின்றது. இவ்வெடுத்துக் காட்டு உவமையணியைத் தொல்காப்பியர் சுட்டிக்கூறா உவமம் என்று குறிப்பிடுதல் இவண் சுட்டத் தக்கது.

அவ்வாறே சத்தியின் ஆற்றலை மருந்தோடு ஒப்பிட்டுக் காட்டும் உவமையணியும் நூலில் இடம் பெற்றுள்ளது (பா. 69)

பாசம் முதலியவற்றை நீக்கி உயிரைச் சுட்ட விதையோடு ஒப்புமை கூறும் சிவாகமக் கருத்தை இந்நூல் நன்முறையில் விளக்குகின்றது. விதையை முளைக்குந் தன்மை இறக்கச் செய்த நிலையே சுட்டவிதையாம். அவ்வாறே உயிர் பிறவி எடுத்தற்குக் காரணமான பாசம் முதலியவற்றை நீக்கிய நிலையே ஞான மெய்தும் நிலை. இவ்வாறு ஆகமம் சுட்டும் உவமையையும் நூல் ஏற்று அழகுறக் கையாண்டுள்ளது.

நூலின் கண் சிவபெருமானைச் சுட்டுமிடத்து இடம் பெறும் அடைமொழிகள் அச் சிவபெருமான் உருவைப்புலப் படுத்துவனவாக உள்ளன.

'முச்சுடர் விழியுடை முதல்வன்' (48:4) என்ற வழி அச்சிவன் மூன்றாவது கண்ணாக நெற்றிக் கண்ணையும் பெற்று விளங்குதல் சுட்டப்படுகிறது. இவன் உமாதேவியைத் தன் இடப் பாகத்திலேயே கொண்டு மாதொருபங்கனாக விளங்குவதை 'பாகுமெய் மொழியுமை பாகன்' (54:4) என்ற வரி உணர்த்துகின்றது. அவருடைய சடையழகைச் செஞ்சடைப் பகவன் (74:4) என்ற அடை குறிப்பிடுகின்றது.

அரவணி கடவுள் என்ற குறிப்பின் அவன் பாம்புகளை அணிகலனாகக் கொண்ட தன்மை புலப்படுகின்றது. சிவபெருமான், பாற்கடலில் பிறந்த நஞ்சை உண்டு கண்டத்தே கறுத்ததாக விளங்குவது 'அருவிட முண்டவன்' என்று ஆசிரியரால் சுட்டப்பட்டுள்ளது. மேலும் கன்னிறையே தலைமாலையாக அவனுக்கு அணிசெய்யுந் திறம் 'திங்களில் கண்ணி பெய்ந்த செஞ்சடைப் பகவன்' (74:4) என்ற அடி அழகுற விளக்குகின்றது இவ்வாறு சிவனுடைய ஆகமத்தைக் குறிப்பிடுந் தொறும் அவனுடைய தோற்றம் புலப்படுமாறு நூல் யாக்கப் பெற்றுள்ளது. பகவாகிய ஆன்மா பசுவாகிய இறைவனை அடைதற்குரிய நெறியைக் கூறும் நூல் பொருளிய அப்பதியின் தோற்றம் சொல்லோவியங்களாக வரைந்து உணர்த்தப் பெறும் நயம் நினையுந்தோறும் மகிழ்ந்து போற்றதற்குரியது

மேலும் நூலின் கண்

முன்றொளிப் படிவம் (21:2)

ஐசலாமுயிர் (39:2)

மணூர் (45:4)

விமலஞானம் (74:1)

இருள் மலம் (93:3)

என்றிவை புல சொல்லாட்சிகள் அழகுற அமைந்து நூலுக்கு அழகு பயக்கின்றன.

நூற்பயன்

விநாயகரை வணங்கித் தொடங்குகின்ற இந்நூலின் பயனை நூலின் தொன்னூற்றொன்பதாம் பாடல் குறிப்பிடுகின்றது. உயிர்களுக்கு நல்வழி காட்டும் இச் சதமணிமாலையைப் பக்தியுடன் போற்றி ஓதிப் பொருள் உணர்ந்தோர் மும்மலத்தில் மூலமலத்தைப் போக்கி ஞானச்சுடரினை எப்போதும் காண்பர். எனவே பசுவாகிய உயிர், பாசத்தை நீக்கிப் பதியை அடைதலாகிய சைவசித்தாந்த முழுமைப் பொருளே இந்நூலின் நோக்கமும் பயனுமாகும்.

முடிவுரை

சைவாகமத்தின் தெளிபொருளாக விளங்குவது சதமணிமாலை மாலை இலக்கிய வகையுள் ஒன்றான சிற்றிலக்கியமாக இந்நூல் வடிவில் விளங்கினாலும் உயிர்கள் இறைவனை அடையும் வழியைக் கூறும் பொருண்மையால் பேரிலக்கியமாகப் போற்றத் தக்கது நூலின் பொருண்மையைப் போன்றே நூலின் நடை, நயம், சொல்லாட்சி அணி நலன்களும் நன்மைந்த நூலுக்குப் பெருமை சேர்த்துப் பேரிலக்கியமாக மிளிரச் செய்கின்றன. எனவே, இதுகாறும் கண்டவற்றால் இலக்கிய இன்பத்தின் வழியே உயிர்க்குரிய நிலையான இன்பத்தை அடைய வழிகாட்டும் பேரின்ப நூல் இச் சதமணிமாலை ஆகும்.

நூற் பொருள்

கடவுள் வாழ்த்து - விநாயகர் வணக்கம்

சிறப்புப் பாயிரம்:

இவையளாகிய ஞானதீக்கைகளை யான் உரைக்கிற்பன்; ஒருக்கிய மனமுடைய அறிஞர்கள் கேண்மின்! என்று கூறும் முதற் பாடல் "தோன்றாத் தோற்றித் துறைபல முடிப்பினும் - தான் தற்புகழ்தல் தகுதியன்றே" என்னும் இலக்கணத்திற்கு மாறாக- பாடல் வடிவில் சிறப்புப் பாயிரம் ஒன்று குறிப்பிடப்பெற்றுள்ளது. 'இவையே சைவசித்தாந்தம் அநாதி என்று கூறும் பதி, பசு, பாசம் என்பவற்றுள் பாசம் என்பதைக் குறிக்கும் ஆணவம், கன்மம், மாயை என்பனவாகலாம். (பதி- இறை; பசு - உயிர்; பாசம் - கட்டு) யான் கூறுகிறேன் கேளுங்கள் என்பது தற்புகழ்ச்சியென்னும் குற்றத்திற்படுமா? இல்லை. எல்லாம் வல்லவனாகிய சிவபெருமானையும், என் குருதேவரையும் தொழுது உரை செய்கிறேன் என்றே சிறப்புப் பாயிரத்தைத் தொடங்குவதால், அவர்களின் திருவருள் துணை நிற்க, தோன்றுகின்றது என் உரை என்பதனால் இக்கூற்று தற்புகழ்ச்சி என்னும் குற்றத்தின்பாற் படாது என்பதே சிறப்பு.

கூறப்பெறும் பொருள்

சித்தாந்தத்தைக் கூறுகிறார் ஆசிரியர் இத்தத்துவம் கூறக் காரணம் யாது? இந்நிலவுலகத்து நிலைபெறும் உயிர்கள் மலம், மாயை, வல்வினை என்னும் மும்மலங்களைப் பிறவியிலேயே பெற்றுத் தோன்றுகின்றன. 'இவையே சைவசித்தாந்தம் அநாதியென்று கூறும் பதி, பசு, பாசம்

என்பவற்றுள் பாசம் என்பதைக் குறிக்கும் ஆணவம், கன்மம், மாயை என்பனவாகலாம். (பதி - இறை; பசு - உயிர்; பாசம் - கட்டு) 'பிறவிப்பயனான உயர் நிலையடைய வேண்டுமாயின் அம் மும்மலங்களை அறுத்து விலக்குதல் வேண்டும். அம்மலங்களையகற்றும் வழிவகைகளைக் கூறுவதே சிவதத்துவம் எனவே தான் சிவதத்துவங் கூறத் தொடங்குவதாகக் கூறுகிறார்.

அந்தத் தத்துவத்தை அறிதலால் ஏற்படும் பயன் என்ன? சிவதத்துவத்தினால் ஏற்படும் இயல்பான உயர்ந்த ஞானத்தால் பரசிவன் தன்மையறிய முடியும். அந்த ஞானமே அவனிடத்தது ஆகும்.

2,3 மெய்யறிவு வகை

சிவதத்துவத்தால் உணரப்பெறுவது ஞானமாகிய மெய்யறிவு. அதுவே மும்மலங்களை அறுக்க வல்லது. பரம்பொருளை யறிந்து இன்புறுதற்காம் வழியைக் கூறுவது. அந்த மெய்யறிவு இரு வகைப் படும். அவை முறையே பரம், அபரம் எனப் பெறும். இவற்றுள் உலகத்திற்கு இன்பமளித்து இவ்வுலகப் பொருள்களை 'உணர்தற்கு அடிப்படையாக விளங்கும் பல வகைக் கலைகள் அபரஞானம் என்பவை; அக்கலைகளே அபரஞானம் எனப் பெறுவன. ஆனால் பிறவிப் பயனை அளித்து, மும்மலங்களை அறுத்து உயர்வடையச் செய்வதாகிய இறையுணர்வே பரம் அல்லது பரஞானம் எனப் பெறுகிறது.

கலைகளில் உயர்ந்தது மெய்யறிவுக் கலை

பரம் பொருளாகிய இறைவனால் தோற்றுவிக்கப் பெற்றதே உலகம் அவ்வுலகத்து உயிர்களும் அவன் படைப்பே. படைப்புக்கடவுளாகிய இறைவன் உலக உயிர்களை - சிறப்பாக மக்கள் உயிரைப் படைக்குங் காலத்திலேயே - ஐயறிவைப்படைத்த மக்களை உருவாக்கிய இறைவன், ஐயறிவுக்கு எட்டாத ஐந்து முகங்களின் இயல்பால் உயிருக்கு ஏற்படும் பயன்களைக் குறித்த செய்திகளை எடுத்து உரை செய்தவன். இவ்வித இது - தீயது இது எனவும், ஐயத்திற்கு ஐயமற்றது இது எனவும் பகுத்தறிந்து அதற்கேற்ப உலக வாழ்க்கையை நடத்தும் திறமை பெறுவதே உயர்ந்த கலையாகும். இக்கலையே இறைவன் உரை செய்த உயர்கலையாகும். இதுவே ஞானம் எனப் பெறுகிறது.

பா. 5

சிவநெறிகளையும் சைவ ஒழுக்கங்களையும் மேற்கொண்டொழுகும் உள்ளமே சிவநிலமாகும். அந்தச் சிவநிலமாகிய உள்ளத்துச் சிறப்பினைப் பலருமறியக் கூறுவதே இறைவன் அருளிய உயர்கலையாகிய ஞானத்தின் பொருளாகும். அக்கலையின் ஒருகூறு பழைமை மருந்தை உணர்த்துதலாகும். பிறப்பை அறுத்தலும் அந்தப் பிறப்புக்குக் காரணமான பாவத்தை ஒழித்தலும் அக்கலையின் முதற் படியாகும். அழிவுக்குக் காரணமான தீச் செயல்களை விட்டு நீக்குதலும் அதன் பயனாய் மேன்மையும் நிலையான புகழும் பெறுதலும், இதன் அடுத்த படிநிலையாகும்.

இந்தப் பன்மறை மருந்தாகிய உயர்கலையை உணர்ந்து ஒழுகுவதனால் நிலை பரத்தை அறிதலே சிவநிலையாகிய உளத்தச் சிறப்பாகும். அந்தச் சிறப்பு உள்ளத்தை நிலையாகப் பெற்று விளங்குவதே பிறவியின் பயனாகும்.

பா. 6

செயலும் அச்செயலின் விளைவும் ஒன்றோடொன்று தொடர்புடையன. எனினும் இரண்டும் ஒன்றல்ல. அவை வெவ்வேறாம். செயலும் செயலின் விளைவும், முறையே கருமம், கருமயம் எனப் பெறுகின்றன. உள்ளத்தைச் சார்ந்து விளங்குவது கருமம், அந்தச் உள்ளத்தின் பயனாய் விளையும் கருமயம் அக்கருமத்தின் வேறுபட்டு விளங்குவதாகும். இவ்வாறே காரணம் வேறு, அக்காரணத்தால் நேரும் காரியம் வேறு; காரியம் வேறு, அக்காரியத்தின் மூலமாக விளங்கும், தெளிவிக்கும் உரை வேறு; அவ்வுரையாற் பெறும் அறிவு வேறு. எனவே கருமம் ஒழிந்ததாகக் கருமயம் பழிதொழிந்து நிற்கும்; காரணம் ஒழிந்ததாகக் காரியம் பழிதொழிந்தது ஆகும். இதை மறுதலையாக நோக்க, காரியம் ஒழிந்ததெனின் காரணம் பழிதொழிந்தது. உரை ஒழிடம். அவ்வுரையால் பெறும் அறிவுத்தெளிவு பழிதொழிடம்.

பா. 7

மாயை அழிவற்றது. அவ்வழிவில்லாத மாயையை மூலமாகக்

கொண்டே அழிவற்ற இவ்வுலகமுந் தோன்றியுள்ளது. இவ்வுலகக் காணும் யாவும் வினையும் நிறைவும் உடையன. இச் பொருள்களாகிய கருவுக்குக் கருத்தானாக விளங்குபவன் பதி என்ற மொழியைப் பெறும் இறைவன்.

பா. 8

பிறரால் கெடுத்தற்கு இயலாதது உயரிய ஞானமெனும் கிரியை யாகும். அதனைப் பெற்றுப் பிறரால் கொடுக்கப் படாத வாழ்வை உடையவன், யாரெனக் காண்போமானால் அவனே இறைவன். அத்தகையவன் கருத்தற்கரிய மெய்ஞ் ஞானம் ஆகிய இரு வன்மை களையும் தன்னகத்தே பெற்றவன்; எங்கும் நிறைந்த விளங்குபவன்; அவனே ஈசன் எனப்படுவன்.

பா. 9

தன்னுடைய வாழிடம் அதிட்டானமாகிய கோயில். தன்னுடைய சீர் எனப்படும் பெரும்பொருள் பரை எனப்படும் சக்தியாளாள். முதிர்ந்த ஒளிப்பிழம்பே தன்னுடைய வடிவம் என்ற இத்தன்மைகளைப் பெற்று விளங்குபவன் ஈசன். அவன் எல்லையற்ற, பரந்த வெளியில் சிறிதும் நடுக்கமோ அசைவோயின்றி நிலையாக விளங்குகின்ற மூர்த்தி என்று பலவாறு துதிக்கப்படுவான். பதி, பசு, பாசம் என்ற மூன்றனுள் அவனே பதியாக விளங்குபவன் என்று சிவாகம ஞானவல்லோர் கூறுவர்.

பா. 10

விகுதற்கரிய மறைப்புத் தன்மையை உடையதாய், யாவற்றுக்கும் மேலானதாய், யாவற்றிலும் தனியதாய் விளங்கும் தன்மையொடு எண்திசைகளே முகங்களாகக் கொண்டு விளங்குகின்ற சக்தி, முதல், நடு, இறுதி என்கின்ற தன்மைகள் யாவும் பெறாமல் 'உள்ளது' என்ற அளவில் அறியப்படும் சக்தி. யாவற்றிலும் நீங்காது உறைகின்ற சக்தி. அதுவே சாந்த சக்தி எனப்படும். இச்சக்தி முன்னர் யாவராலும் போற்றப் பெற்றது. அதுவே பதியாகிய குரு என்றவாறு நிலைபெற்று விளங்குவது ஆகும்.

பா. 11

இறைவன் பாசம் முதலான மலங்கள் அற்றவன். அமலன் என்று போற்றப்படுபவன். அவனுடைய உருவம் இன்னது என்று அறிதற்கு அரியதாகும். இத்தகைய அரிய தன்மையைப் பெற்றுள்ளமையால் அவனே மருவிய உருவில் நின்று உயிர்களுக்கு வகுக்கப்பட்டுள்ள எவ்வகைச் செயலையும் செய்கின்றான். எனவே உலகில் நடைபெறும் செயல்கள் அனைத்தும் அவனுடைய செயலே. அவனால் வழங்கப்பெற்ற உயிர்கள் ~~பெற்றுள்ள~~ உருவங்களினால் செய்யப்படுவதன்று. எனவே யாவும் அவன் செயலே என்பது தேற்றம்.

பா. 12

சிவாகம நோக்கில் சக்தியைச் சார்ந்து நிகழ்கின்ற செயலாகிய

காரணமும் வேறுவேறு என்று எண்ணுவதற்கில்லை. செயல்நிகழ்கின்ற நிலை சித்து. செயலேதும் நிகழாத அசைவற்ற நிலை அசித்து. சித்திலிருந்து அசித்து வேறுபடுமாறுபோல சக்தியின் நிலை அறியப்படுவதில்லை, சக்தியின் இத்தன்மையினால் இயங்கும் தன்மையுள்ள வேகம் என்ற காரணம் பல்வினைகளின் காரணமாக ஞானக் கிரியையோடு மருவி மயங்கி நிற்கும்.

பா. 13

இறைவன் உருவில்லாதிருந்தும் அனைத்துயிர்களுக்கும் உதவுகின்ற பயனைக்காண்பது போன்று அளவிடவற்ற இறைவனே பரந்த இவ்வுலகத்தைத் தன்னுடைய இச்சையினால் படைக்கின்றான் என்று மலத்தை நீக்கிய பேருணர்வினை உடையவர்கள் உரைப்பர். எனவே இவ்வுலகம் இறைவனுடைய இச்சையினால் படைக்கப்பெற்றது என்பது தெளிவு. இறைவன் இவ்வுலகைப் படைத்தற்கு, உயிர்களைப் படைத்தும் காத்தும் அழித்தும் அவன் நிகழ்த்துகின்ற செயல்களுக்கு உரிய காரணத்தை ஆராய்ந்த கம்பர் அதற்கு விளக்கம் காணவியலா நிலையில் அதனை 'அலகிலா விளையாட்டு' என்று குறிப்போந்தமை ஈண்டு ஒப்பு நோக்கத்திற்குரியது.

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே

என்பது அப்பாடல்

பா. 14

சந்தன், உத்தன், ருத்தன் என மூர்த்தியாக ஈசன் விளங்குகின்றான். அவ்விசனால் மொழியப்பெற்ற இறைபேதம், சக்தியின் பேதம் ஆகியவற்றை அவனே தன்னாற்றான் சாரமாக வைத்தது என்று உரைப்பர் வேதநூல்களோடு ஆகம நூல்களையும் வல்லோர்.

பா. 15

இறைவன் எரி என்னும் அழலின் காரணமாகவே ஈசன் எனும் பெயர்பெற்றான் என்பர். அவனே காரணப் பொருளாக விளங்குகின்றான். காரியங்கள் தோறும் கலந்து நின்று காணப்படுவதாக இங்கு சிவம் துணையாகவும் விளங்கும் தட்பம் பொருந்திய ஓரியல்பைப் பெற்று விளங்குவதே அக்காரணம்.

பா. 16

பற்பலவாகிய வடிவங்கள் எனப்படும் பொருளாகி எவற்றிலும் தோன்றி நிற்கின்ற அவையனைத்தன் ஆகி நிகழ்கின்ற மதி உடையது காரணம் ஆகும். இதனையே இம் முறைமையினாலேயே உணர்வின் மிக்க இறைவனாக பொருந்துவது என்பர். இதனால் இறைவனே காரணப் பொருளாக விளங்குகின்றான் என்பது வலியுறுத்தப் பெறுகிறது.

பா. 17

இறைவன் ஐம்பெரும் தொழில்களைப் புரிகின்றான். இவ்வுலகத்தைப் படைத்தல், பாதுகாத்தல், அழித்தல், மறைத்தல், பாசம் முதலியவற்றை விடுத்தல் என்பனவே அவ் ஐம்பெருந் தொழில்களாம். பயன்படு வினைகள் என்று கூறப்படுகின்றனவாக தடையேதுமின்றி ஏற்றுப் பெறுகின்ற இவ்வைந்து தொழில்களும் இறைவனின் ஒரு பெரும் தொழிலாகும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களோடு இறைவனின் செயல்கள் முடிவதில்லை. அவை மேலும் மறைப்பு, விடுப்பு என்ற இரு தொழில்களோடு இணைந்து ஐந்தொழில்களாகின்றன. பதியைப் போன்றே பாசமும் அநாதி பந்தித்திருக்கும் பாசம் நீங்கும் வரை உடல் அழியுந்தோறும் புதுப் பிறவிகள் தோன்றிக் கொண்டே இருக்கும். பாசத்தை இறைவன் விலக்கும் நிலையிலேயே பிறவிக்குள்ள மறைப்பு நீங்கி விடுப்பு நிகழும். பக்குவமான ஆன்மா இறைவனைச் சேரும். இவ்வாறு ஐந்தொழில்கள் இறைவனால் நிகழ்த்தப்படுகின்றன.

பா. 18

விடுப்பு என்னும் தொழில் ஒடுக்கம் என்று கூறப்படும். இறைவன் இவ்வொடுக்கத்தை, பாசத்தை ஒழித்தோர்க்கு மட்டுமே அருளுவான். மற்றவர்க்கு அவர்தம் வினைப்பயன் காரணமாக மேலும் வினைகள் தொடரும் வண்ணம் பிறவிகள் தொடருமாறு மாயா சக்தியை அமைப்பான்.

அவ்வுயிர்கள் வினைகள் யாவற்றையும் கடந்து அவற்றில் அழுந்தாமல் நீங்கும் வரை பரமன் பார்த்திருப்பான். எனவே படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றும் உலக உயிர்கள் அனைத்திற்கும் பொதுவாகும். ஒடுக்கம் பாசத்தை ஒழித்தவர்க்கே கிட்டும். ஏனையோருக்கு மறைப்பாம் தொழிலால் வினைகள் தொடர்ந்து கொண்டே யிருக்கும்.

பா. 19

வினை முதல்வனாகிய இறைவனைத் தன்னகத்தே உடையவன் பசு எனப்படுவான். அப்பசுவாகிய உயிரை இறைவன் ~~கேவலம்~~ அழுத்தும் நிலையில் அப்பசு தனக்கு இன்பமான ஓர் உடம்பினைப் பெற்று உலக உயிராகிறான். இந்நிலையில் தாம் பெற்ற அவ்வுடம்பிற்கு அழிவில்லை என்ற எண்ணம் அவனிடத்தில் தோன்றுகிறது. இந்நிலையில் அவன் சிற்றறிவாளன் எனப்படுகிறான். மேலும் அவன் ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்களைச் சேர்ந்த வழி பெரிய வியாபகன், அசடன் என்ற நிலைகளைப் பெற்று தன்னுடைய வினையை நுகரத் தலைப்படுகிறான்.

பா. 20

ஆதியும் அந்தமும் இல்லாத பாசத்தினால் மாண்ட மலங்களைச் சார்ந்த பசுத்துவம் என்னும் தன்மையை அறிவோர் உரைப்பர். இப்பிறவிகளுக்குக் காரணமானது மாயை, இதனை விதையோடு உவமிப்பர். விதை ~~முளைக்~~ கும் தன்மை வாய்ந்தது. அம்முளைத்தச் செடியினது

மேலும் பலவினைகள் உண்டாகி அவ்வாறே பல்கிப் பெருகும். அவ்வினையைச் சுட்டு, தவிடும் உமியும் நீங்கிய வழி அது முளைக்கும் தன்மையை இழக்கிறது. அவ்வினையைத் தீ கபால பிறவிகள் தொடர்வதற்குக் காரணமான பாசம் முதலியவற்றை விலக்குவதினால், ஒடுக்குவதினால் பிறவிகளை ஒழித்து இறைவனோடு ஒன்ற இயலும். இதற்குரிய வழி வகைகளைக் கூறுவதே சைவ சமயம் ஆகும்.

பா. 21

மலமானது எவ்வுயிருக்கும் ஒன்றே. எனினும் அது அவரவர் வினைப்பயனுக்கேற்பப் பெரியதாகப் பேசப்படுவதும் உண்டு. இவ்வுயிர்கள் தோறும் தங்கியுள்ள அம்மலங்கள் நீங்குதற்கு உதவுவனவாக பல சக்திகள் உள்ளன.

பா. 22

இறைவனே உயர்ந்த சக்தி. அவனே எவ்வுயிர்களுக்கும் அருள் செய்யும் அவன். எனினும் ஒருவன் செய்த கருமம் போன்றே மலங்களும் வினைகளாகித் தொடரும். இதனாலேயே அவை பாசம் என்று போற்றப்பெறுகின்றன. அவற்றை நீக்க இறைவன் புரியும் அருளை ஆகம நூல் நெறி நின்றோர் உரைப்பர்.

பா. 23

சிவமாகிய சக்தி ஆணவத்தின் வழியே பற்பலச் சக்திகளை வளர்ச்சியடையச் செய்கின்றது. இவையாவும் சிவம் என்னும் பெருங்கதிரினால் விழுங்கப் பெறும். அப்பொழுதே அவன் அருள் புரிவான் என்பர் ஆகம நூலார்.

பா. 24

மனிதப் பிறவி தொடர்வதற்கு அடிப்படையாக விளங்குவது குண்டலினி எனும் சக்தி. இச் சக்தி மாயை மற்றும் வினைகளால் தொடரப் பெறுகின்றது. இதனுடைய செயல்கள் விரிவதற்கு அரிய நாதம், விந்து முதலானவற்றின் பாற்படும் என்று ஞானக் கலையை முற்றும் கற்றுணர்ந்தவர்கள் உரைப்பர்.

பா. 25

யானையின் மத்தம் போன்ற ஆணவம், சந்தி, சூக்குமம், நான் என்ற இந்நான்கையும் தன்னும் நிலையில் விந்துவே மாயையால் இவ்வாறு பலவாறு விருத்தி அடைகின்றது என்று கூறுவர்.

பா. 26

உலகத் தோற்றத்திற்கு காரணமாகிய அனைத்து மாயைகளையும் நுட்பமாகக் கடந்து அவற்றை முற்றும் விலக்குவதற்கு ஏற்ற தந்திரியாக விளங்குவது குண்டலினி ஆகும்.

பா. 27

இங்கு உரைக்கப்படுகின்ற மாயை சிவமே முதலாகப்பல்வேறு கருமங்களின் வழி பலவாறு விரிகின்றது. இதன்வழி மறைப்பின்கண் போற்றப்படும் சக்திகள் பல.

பா. 28

மெய்த் தவத்தோர் தூய மதயிற்பொருந்திய யானையை ஒப்ப விளங்குபவன் சிவனாகிய இறைவன் என்பர். உயிர்களுக்கு அத்தனாக போற்றப்படும் அவனே அவ்வுயிர்களின் முடிவிடமாகவும் விளங்குகின்றான். அவனே அவ்வுயிர்கள் பால் அமைந்துள்ள மாயைக்கும் மன்னவனாக விளங்குகின்றான்.

பா. 29

உயிர்களிடத்து மாயைக் காரணமாக உண்டாவன கலை, காலம் வித்தை இராக நியதி, மூலம், குணம், புத்தி, அகங்காரம் சித்தம், ஐம்பொறிகள், ஐம்பூதங்கள் ஆகியன. எனவே உலக உயிர்களால் நிலையானதாகக் கருதப்படும் இவை யாவும் மறைப்பினால் விளைந்த மாயையே.

பா. 30

உயிர்களுக்குக் கூறப்படும் புண்ணியம், பாவம் என்கின்ற தன்மைகள் முத்திறத்தன. அவை வினைகளைச் சார்வனவன்றி உயிர்களின் சாதிகளை அனுவகா என்று உரைக்கின்ற கன்மம் பொருந்த விளங்குதல் இல்லை.

பா. 31

அதிட்டமானது கட்புலனாகாது; சூட்சுமத் தன்மை வாய்ந்தது. செயல்வழியே தான் இது வெளிப்படும். அவ்வெளிப்பாடே கருமம் ஆகும். இக்கருமமே உடல் தோன்றுதற்கும் அழிதற்கும் காரணமாகவும் காரியமாகவும் விளக்கத் தோன்றி வினைநிகழ்வுகளுக்கு அடிப்படையாகிய மூன்று சாதனங்களோடு விரவி நிற்கும்.

பா. 32

பொய், மெய்களின் அடிப்படையில் தோற்றம் நிகழ்கிறது. அத்தோற்றம் துடைப்பு நிலையில் இறப்பாக முற்றுப் பெறுகிறது. இடைநின்ற வாழ்க்கையே மாயையால் நன்மை தீமைகள் என்னும் வினைப்பயன்களாகத் தோன்றுகின்றன. எனினும் இப்பிறவித் தொடராகிய மாயை வினைகள் முற்றும் நீங்கா வழி துடைப்பின்கண் முடிவுறுவதில்லை.

பா. 33

மலத்தினால் கட்டப்பெற்றுள்ள உயிரானது வினைகளை நீக்கி தீக்கை பெற்ற வழி முத்தியடைந்தவன்-முத்தன் என்ற நிலையை அடைகிறது. இவ்வாறு வினைகளின் தொடர்ச்சியால் நிலையில்லாது தொடர்ந்த அவன் வாழ்க்கை முத்தி நிலையால் நிலைத் தன்மைப் பெற்று முடிகிறது. இம் முத்தனுடைய அவத்தைகள் கேவலன், சகலன், நற்சுத்தன் என்ற மூன்றாகக் கூறப்படுகிறது.

பா. 34

பசு எனப்படும் நிலையுடைய உயிர் நித்தன், குணமும் தொழிலும் இல்லையான் தன்மையன். இகலன் சுத்த தன்மையன். வியாபகன், சேதனன் வினை முதலவற்றால் சுத்தி செய்யப்படுபவன் தன்னிலை உணர்த்தப் பெறுகையில் சுடர் எனத் திகழ்வான். சத்தன் எப்புறத்திலன் என்றவாறு பசுவின் நிலைகள் உணர்த்தப் படுகின்றன.

பா. 35

மலங்கள் யாவும் இல்லை என்றாகும்படி, வென்ற சுத்தர்களுக்கு வினை நுகர்வாகிய போகமும் இல்லை என்ற தன்மையைப் புலவர்கள் சொல்லுவர்.

பா. 36

ஞானமாகிய மெய்த் தொழிலுக்குப் பொருந்தும் தன்மை பசுவாகிய உயிர்களிடத்தில் என்றுமுண்டு. ஞானமாகிய முத்தியை அடைந்த நிலையில் இறைமுகம் கேட்டிடும் நிலையில் தாமே என்று கூறுவர் மெய்த் தவத்தர். ஞானம் எய்திய நிலையில் பசு, பதியோடு ஒன்றிய நிலையில் தாமே இன்ற என்ற தன்மை உளதாகும்.

பா. 37

உயிர்களுக்கு ஞானமெனும் உணர்வு என்றும் உரியது எனினும் அவ்வுணர்வு உயிர்களிடத்தில் தோன்றாமையினாலேயே மறைப்பு நிகழ்கிறது. உயிர்களுக்கிடையே மறைப்பைத் தோற்றுவிக்கின்ற அவ்விறைவன் உயிர்கள் ஞானத்தை உணர்ந்த வழி அதில் வசப்படுவான்; விட்டுவிவான்.

பா. 38

பாசம் நீங்கிய நிலையில் அப்பாசமின்மையால் உண்டாகும் பரவசம் சொல்லும் தன்மையன்று. அவனும் தனது வாக்கின் தன்மையால் முத்தன் எனப்படுகின்றான். முத்தி பெற்ற நிலையில் அம்முத்தன் எனும் பெயரும் அவனிடத்தினின்று நீங்கப் பெறும் என்பதை இறைவனால் வழங்கப் பெற்ற சைவ தந்திரத்தை உணர்ந்தோர் கூறுவர்.

பா. 39

பசுவாகிய உயிர் பாசத்தை விடும் நிலையில் அனாதியாகிய அப் பாசத்தின் பண்பால் பிறவிகளுக்கிடையே ஊசலாடுகின்றது. இவ் ஊசலாடும் தன்மையால் இவ்வுயிர் சித்துணர்வு உடையது. ஈசனோ மலமற்றவன்; எனவே அவன் ஒளி பொருந்திய முத்துணர்வினன் என்று கூறுவர்.

பா. 40

ஆதியாகிய தன்மையின் என்ற சிவனுக்கும், பிறவிகளுக்கிடையே ஊசலாடும் சீவனுக்கும் ஓதப்படுகின்ற இரு தன்மைகள் சுத்தம், அசுத்தம் என்பன. இவற்றுள் சுத்தம் ஈசனுக்கும் அசுத்தம் சீவனுக்கும் உரியதாக நிரன்முறையாக முனைவர் அறிவர் கூறுவர்.

பா. 41

ஒளி பொருந்திய பளிங்கினை ஒத்த தெளிந்த உயிர், களிம்பு படிந்த செம்பினை ஒத்து மாசு படிந்தமைக்கு உரிய காரணத்தை ஆராய்ந்தால், அக்காரணம் அறிவுக்கு எட்டும் வகையில் விளங்கும் தன்மையன்று. அதைச் சொல்ல முற்படினும் இவ்வளவினது என்று கூறுதற்கியலாது.

பா. 42

கலை, அக்கலைக்கு உரிய நிலைக்களம் முதலானவை விளைத்தற்குரிய உயிருக்குக் கருவியென்பர். மேலும் இவை தத்தம் தன்மையால் பலவாறு வேறுபட்டவையாக உயிர் தோறும் அமைகின்றன.

பா. 43

ஒளிபொருந்திய சுடராகிய பொருள்போன்று ஒருவரிடத்து

அமைவிலும் பொருளுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பின் தன்மை கருதி அவை வேறு வேறு ஆவனவேயன்றி ஒன்றல்ல என்பர்.

பா. 44

முத்திப்பேற்றுக்கு முயலும் நிலையில் உயிரானது உடலெடுத்து அன்பு கொள்ளுதல் இல்லை. வீடுபேறு அடையும் வரையில் மோனத்தவம் மேற்கொள்ளுவதால் அவ்வுயிர்க்கு உணவுமில்லை.

பா. 45

ஈசனது இச்சையினால் உயர்கலைகள் உயிர்களைச் சாருகின்றன. இதனால் வினைச் சார்புக் காரணமாக பசுவானது அதிகாரி என்று அறிஞரால் கூறப்படுகின்றது.

பா. 46

இருவினைக் காரணமாக இறைவனை மருவுவதற்குரிய வலியின் அன்மையால் வினையொடு மருவுகின்ற புணர்ச்சியே நிகழ்கின்றத் தன்மைத்து.

பா. 47

பாசம் முதலியவற்றால் உயிரின் சுயதன்மையாகிய பசுத்துவம் மறைக்கப்பட்டு இம்மைக்குரிய சக்தியே சிற்சத்தியாக இசைத்தலின்

உயிர்கள் சுதந்திரம் பெறுமாறு இல்லை. உயிரைச் சார்ந்துள்ள வினைகளைப் போக்குதலே இங்கு கருமமாக விளங்குவதால், அவை இறைவனை அவாவுகின்றன.

பா. 48

சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களையே கண்களாக் கொண்டு முதல்வனாகிய சிவனின் ஆகமம் கூறும் பொருளாவது, உயிர்களை இயக்குகின்ற இச்சையில் வலியுடையவன் ஈசன்; உயிர்கள் புரிகின்ற செயல்களை ஆய்ந்து அவ்வவற்றிற்குரிய வினைகளை அடையச் செய்கின்றவனும் அவனே. இச் செயல்கள் அல்லது வேறு செயல்கள் அவனுக்கு இல்லை.

பா. 49

அவனுடைய செயல்களாக ஆகமவழி அறிய வருகின்ற செய்திகளாகிய உயிர்களை இயக்குதலும், அவற்றுக்குரிய வினைகளை அடையச் செய்தலுமாகிய அவை, காரிகைப்பொருளும் அங்கத்துப்பொருளும் போதலும் என்று கூறப்படும். இவ்வாறு ஓதப்பட்ட பைசந்தி என்று இங்கு உரைத்த உரைக்கு இறுதி பலத்தற்குத் துணையாக நிற்பதாகும்.

பா. 50

உலகினை முழுவதுமாக உணர்த்தும் சக்தி என்று புலவர்கள் இறைவனைப் போற்றுவர். அவனல்லாது ஒரு போதும் உயிர்களுக்கு அறிவு உண்டாகாது என்பது தெளிவு.

பா. 51

இறைவனே உயிர்களுக்கு அறிவை உணர்த்துபவன். அவனன்றி ஓரணுவும் அசையாது — என்றிவை உணர்வுகள் கூடி நின்று வாதங்களும், எதிர் வாதங்களும் நிலவுகின்ற புலமைகள் மெய்த் தன்மையை வழங்குவது சிவாகமமாகிய உயர் மறை ஆகும்.

பா. 52

போகத்திலே இச்சை கொண்ட மனிதனுக்கு மாயையே மோகத்தை விளைவிப்பது. இம் மாயையே முதலாக, மண் முதலான தத்துவங்கள் அனைத்தும் தோன்றுகின்றன. காவிடை வண்டு போல மனிதன் மாயையில் அழுந்தி வினையை நுகர்கிறான்.

பா. 53

உயிர்களை அடைகின்ற இன்ப துன்பமாகிய வினைகள் தொலைத்தற்கு இயலாதவை. மனிதனால் நுகர்தற்கு இயைந்தனவாகிய இவற்றை அடைதற்கு அவனால் விலக்குதற்கரிய இருவினையே காரணமாகி நின்று அவனை நுகரச் செய்கின்றன.

பா. 54

ஆகாரம், கரணம், விடயம் எனும் இவைகள் போகத்தை நுகர்கின்ற

உயிர்கட்கு முன்வினை காரணமாக விளைந்து நிற்கும் என்று பார்வதியை இடப்பாகத்தில் கொண்ட சிவபெருமானின் ஆகமம் கூறுகின்றது.

பா. 55

மாயை அடைந்த மலமறைப்பினால் உயிர்கள் ஆயுள்மேல் ஆசை கொள்கின்றன. இதனால் மாயை விளைவிக்க போகத்தை எய்துகின்றன. புருடன் புவியில் இத்தன்மையனாகவே விளங்குகின்றான்.

பா. 56

மாயை விளைவிக்கின்ற வினை நுகர்வினால் புருடன் குடும்பத்தில் ஈடுபட்டு குடும்பி, கேத்திரி, சரீரி என்றினைய பெயர்களோடு சகலன் என்று விளங்குவதாகக் கூறுவர்.

பா. 57

தீமையாகிய இருட்சக்தி தன் செய்கையில் மீண்டதால் ஆதியாகிய நற்சக்தி அருள் தர மெய்மையாகிய நற்கிரியைகள் கூடி இறைவன் உயிர்கட்கு குருவாக முன்னிற்பன்.

பா. 58

சத்தி பொருந்திய குறியினால் ஒருவர் முத்தி பெறுதலில் நாட்டம் கொள்வர். இறைவனிடத்து பக்தி எழும். பக்தியில் உயர்ந்த பக்தி சிவபக்தி. இச்சிவ பக்தியால் மெய்த்திறம் வாய்க்கப் பெறும் ஞானம் இவை யாவும் விதியினாலேயே நிகழும்.

பா. 59

ஒருவன் அறிவில்லாதவன் ஆயினும் அவனுக்குச் சத்தி வீழ்வதனால் உணர்ச்சி உண்டாகி அறிவடைந்த விருப்பம் ஏற்பட்டுப் புத்தியானது தெளிவதும். இதற்குக் காரணம் கூற இயலாது.

பா. 60

விரத்தனாகிய விவேகியின்பால் அறியும் விருப்பாகிய அவா உள்ளதெனின் ஈசன் அவனை பவக்கடல் கடக்குமாறு செய்வான்.

பா. 61

அறிவில்லாதவன், விவேகி ஆகிய இருவரிடத்திலேயும் இறைவனின் இயக்கம் நடைபெறுகிறது. அருள் உள்ளம் கொண்டு இறைவன் அருள் செய்பவர்க்கு நற்செயல்கள் விளையும், மேலும் அறிவில்லாதவன்பால் பாவம் காரணமாகவும் அருள் செய்யப்படும். எனும் இறையருள் இன்றி இருவருமே போகம் விடுதல் அரிதாகும்.

பா. 62

குருவை அடைந்து அவர்பால் தீக்கைப்பெற்று அதனால் உறவுகளையெல்லாம் துறந்தவன் அதன்மூலம் பாசம், முதலியவற்றைகளை விலக்கி நின்மலனானவன். துயர் விளைக்கின்ற பிறவி முதலியவற்றை அறுத்து திரும்பற்ற சிவசாயுச்சிய நிலையை அவன் அடைகிறான்.

எனவே குருவின் மூலமே ஒருவன் தீக்கைப் பெற்று ஞானநிலை எய்த முடியும்.

பா. 63

தத்துவங்களினால் தளைக்கப்பெற்று விளங்குபவன் எத்தனை தருமம் தனை நிற்பினும் சித்தத்தில் சிவதீக்கைப் பெறாதவழி தன்னை தளைத்துள்ள பாசம் முதலிய கட்டுகளை நீக்க இயலாது.

பா. 64

தாழ்வில்லாத அகத்தின் கண்ணே பொருந்தி விளங்குகின்ற சக்தியே உயிருக்கு இறையாகும். வீழ்ச்சியற்ற அச்சக்தி பரந்து வியாபித்துள்ளது. எனினும் அதனை அறிவதாகிய ஞானநிலை மறைப்புக்கு உட்பட்டுள்ளது. எனவே மன்னரேயாயினும் இதனை எளிதில் விளக்கிக் கொள்ள இயலாது.

பா. 65

ஒருவன் நிறைந்த ஞானம் உடையவனாயிருப்பினும் அவனால் நடைகள் யாவற்றையும் கடந்துநின்ற இறைவனைக் காணுதல் இயலாது போகலாம். சிற்றறிவு எனப்படும் குறைந்த அறிவினால் இறைவன் ஓரிடத்தில் உள்ளான் என்ற அறிவினால் அந்த ஞானத்தைப் பெற்றுத் திகழ்கிறான்.

பா. 66

ஞானமானது சிறியப் பொருள்கள் எவற்றினும் சிறிதாகும். அவ்வாறே பெரியபொருள்கள் யாவற்றினும் பெரிதாக விளங்கும். எத்தன்மையனாக நோக்குகின்றோமோ அத்தன்மைத்தாகவே தோன்றும். இருளின் அளவுக்கு இணையான எரிசுடர் ஒளியாக விளங்குவதாகும்.

பா. 67

ஒருவன் சத்தியைச் சேர்ந்த நிலையில் அறிவன் எனப்படுவான். அவன் அறிவினால் செம்மைப்படாத நிலையில் அறிவில்லாதவனாகவும் அறிவு மயங்கிய நிலையில் இருப்பவனாகவும் கூறப்படுவான்.

பா. 68

ஆசிரியர் முன் துயில்கொள்கின்ற மாணாக்கனைக் கோல் கொண்டு அடித்து உணர்த்துவது போன்று ஈசன் மோகத் துயிலில் மூழ்கியிருப்பானை அரிய சத்தி எனும் ஆயுதத்தால் அறிவிப்பான்.

பா. 69

நோய்க்கு மருந்து உட்கொள்ளும் காலை அம்மருந்தின் ஆற்றலைக் காட்டிலும் வலிமைமிக்கதாக வருகின்ற நோயைப் போல சத்திப் பொருந்திய நிலையிலும் அதனினும் மிக்க ஆற்றல் உயிர்கட்கண் திகழும்.

பா. 70

பரந்த சுதந்திர தன்மையுற்றுப் படைக்கப்பெற்றுள்ள ஒருவன் வினை மிகுதியால் போகத்தில் ஆட்படினும் அவ் யாக்கையில் புகுந்துள்ள தூய பசுத்துவத்தின் தன்மையோடு பொருந்தி அவ்வுடலில் திகழ்கின்ற சிவத்தினால் முத்தி ஆன்மாவாகச் சேர்வான்.

பா. 71

~~நிலையான~~ பாதப் பரந்து விளங்குகின்ற ~~சித்தத்தின்~~ சத்தியின் இடமாக விளங்குகின்றவனாயினும் தான் கருதிய பொருட்சித்தியின் பொருட்டு பொருந்தித் திகழ்கின்ற பாசவத்தை தன்னுட்கொண்ட சாம்பவமாகிய சக்தியை வேறாகக் கருதான்.

பா. 72

உயிரானது உரு அளவில் வந்தடைந்த இவ்வுலகின்கண் ஞானமானது ஒன்றென்னும் தன்மைத்தாய் பரசிவமயமாக யாங்கணும் பரந்து அழுக்கற்ற தன்மையுடன் சாந்தமாகத் திகழும் ~~சாந்தமாகவது~~ உணர்வுகள் அனைத்தையும் கடந்து நிற்கும் நிலை:

பா. 73

வெம்மையாகிய தீ தானும் அழுக்கற்றது. தன்னை அடையும் பொருள்களின் அழுக்கையும் போக்கவல்லது. அவ்வாறு அழுக்கற்று நிர்மலமாகி யாவற்றினும் மேலாகத் திகழும் பிரிவற்ற ஒன்றாகிய பராபரை தானே சிவசத்தியாகி உயிருக்குப் பரசிவத்தை உணர்த்தி உயிர் முத்தியடைதற்குரிய சத்தியாக விளங்கும்.

பா. 74

சங்கரனாகிய சசி குறைவற்ற ஞானமாகத் திகழ்பவன். அவனை விலக்கும் நிலையில் இவ்வுலக இயக்கமேதன் அங்கமாகத் திகழ்பவன். காணுகின்ற எப்பொருளையும் நின்று விளக்குபவன் என்று ~~திங்களைச் சென்னியில்~~ சூடிய சிவபெருமானின் ஞானாகிய ஆகமம் கூறும்.

பா. 75

தீக்கையானது யாவர்க்கும் வழிகாட்டும் வகையில் பரந்த தன்மைத்தாய் மேல்நிலையில் அமைந்த விளக்காக இருப்பது. பாசம் முதலிய கட்டுக்களை அற்றுப் போகுமாறு செய்வது. உயிர்கள் சிவபதத்தை அடையுமாறு அருள்வது ஆகும்.

பா. 76

சொல்லுதற்கு அரிதாகிய தீக்கையானது பெருமையுடைய மொழியாகும். மெய்ப்பொருளாக விளங்கும் அத்தீக்கை மலத்தின் வழியைக் கெடுத்து ஞானத்தை நல்கும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

பா. 77

அறத்தின் வலிமை வெளிப்படுவதாகிய ஞான மெய்சக்தியால் கூறப்பட்ட அத்தீக்கையாகிய அருள் ஆசிரியரால் வழங்கப்படும் நிலையில் ஒருவருக்கு விளங்குமென்று பதிவதனால் வானொடு கூடிய இவ்வுயிருக்கு ஒளிதருவது நன்று.

பா. 78

தானிருந்த உடலை நீக்கி பாசமகன்று தன்னை உணர்ந்து ஒளியினால் ஞானம் காண்பவனாகிய சாந்தனாக உயிர் மீள்வதோடு தன்னிடத்திருந்த அவாவினையும் நீக்கும்.

பா. 79

தீக்கையாகிய அனல் மிக்க தீயினால் மலம் நீக்கப்பெற்று உயிர்தன்னுடைய வன்மையை உணர்ந்து தன்னோடு பொருந்திய பெரும் சக்தியால் முத்தி பேற்றை அடையும்.

பா. 80

தீக்கையினால் தன்னை உணர்ந்த வழி யோகியாக நிற்கும் புருடன் கேவலம் எனும் பண்பை தன்னிடத்தே கொண்டுள்ளான் எனும் அவனிடத்து ஆணவம் முதலான மலமின்மையால் மீண்டும் பிறவிக் கடலில் அழுந்துவதில்லை.

பா. 81

நீரால் அடித்துச் செல்லப்படும் பொருள்கள் ஒன்றாகக் குவியுமிடத்து ஏற்படும் சுழியைப் போல உயிரினால் விலக்கப்பட்டு சகல பாவங்களும் ஒன்று குவியுமிடத்து ஏற்படும் சுழியாக ஒருவனைச் சேர்ந்து எழும். அதனால் உயிரானது முப்பத்தாலும் காக்கப்பெறும்.

பா. 82

சங்கரனாகிய சக்தியான ஒளியினால் சித்த வன்மையோடு நோக்கும் அதனால் ஞானக்கண்ணின் மறைப்பொழிந்து ஆதி சக்தியொடு இசைந்த சிவனை உயிர் காணும்.

பா. 83

இறைவன் தாளினை அடைதற்கு முதற்கண் உணர்வினை முழுதும் நீக்க வேண்டும் அவ்வாறு நீக்கும் நிலையில் ஒருவன் அவ்வுணர்வினாலே அன்புகொண்டு உணர்ந்த பின் அவ்வுணர்வினால் அறியப்பெற்ற அறிவின் வழியே உணர்வை முழுமையாக நீக்க வேண்டும். பாசத்தை ஒருவன் நீக்க வேண்டுமாயின் அப்பாசங்களை நீக்கிய இறைவனின் தாள்கள் மீது பற்றுக்கொள்ள வேண்டும். பின் அப்பற்றும் பாசங்களை நீக்கிய பின்தானும் நீங்குதல் குறித்து. இதனை வள்ளுவர்,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றும்
பற்றுக பற்று விடற்கு

என்று குறிப்பிட்டுள்ளார்.

பா. 84

மனமானது பரசிவமாகிய தத்துவத்தை நினைந்து அதனோடு ஒன்று ஒடுங்கி நிற்கும் நிலையில் உணர்வுகள் யாவும் தளைகள் நீங்கி விலகும்.

பா. 85

மண்முதலான பல தத்துவங்களையும் கடந்து மனத்தைவென்று பற்றுகள் நீங்கி வாழ்பவன் பரமனைச் சார்ந்த முத்தன் என்று பாம்பினை அணிந்த சிவபெருமானின் ஆகமநூல் கூறும்.

பா. 86

ஊனை சேர்க்கின்ற பிறவிக்குக் காரணமான நெடுவழியில் செல்லாது மிகவுயர்ந்த இடமாகிய சிவத்துவத்தை அறிந்தவன் அசைவற்ற சுடர்போல அமைதியுடன் திகழ்வான். விரும்புகின்ற நலம் யாவும் பெறுவான்.

பா. 87

மந்திரம், தியானம், வணக்கம், பூசை, தந்திரம் இவை யாவும் இன்றி-சந்நிதியில் இறைவன் மீது கொண்ட அன்பே பொருளாக வாழும் நிலையில் பற்றுகள் யாவும் நீக்கப்பெறும்.

பா. 88

மிகவிரைந்த நடையில் செல்லும் காலமாகிய விசும்பினை விடுபடாதது போல் ஒருவன் நெஞ்சில் இறைவன்மீது கொண்ட நேயம் அவன் உலக விடயங்களோடு உழன்றபோதும் விடுபடாது.

பா. 89

இத்தகைய நிலையில் இறைவனோடு ஒன்றிப் பற்றழுத்த தேறிகள் சிந்தனையைத் தடையறச் செலுத்துவர். இந்நிலை கடந்த விளங்குகின்ற மெய்ப்பதத்தின்கண் அறிஞர்தம் உளங்கள் உந்துதலோடு ஓடிச் சேரும்.

பா. 90

ஒருவன் பாசம், மலம் முதலியவற்றை வென்று மெய்ப்பரத்தை அடைந்த நிலை இமை மூடித் திறக்கின்ற சிறுபொழுதே எனினும் அவன் மெய்ப்பரத்தை அடைந்த காரணத்தால் மீண்டும் பிறவி அடைதல் இல்லை.

பா. 91

பகுத்தறிவின் ஐயமற்ற நிலையைக் கடந்த நீங்கி பெரும்பதி பாவனையைப் பெற்று நிற்பதே மிகப் பெரிய பயனாகும். அவ்வாறிருக்கக் குறையற்ற முழுணர் அறிஞன் ஆகிய இறைவன் மாட்டு செலவு மேற்கொள்ளல் அவனுக்கு எளிதாகும்.

பா. 92

புவியீர்த்த கொண்ட போகம் நீக்கிப் புவிதனிடத்து வைத்தனிய

போகத்தைப் போற்றும் தன்மையால் ஒருவன் தனக்கொரு அதிகாரி யின்றித் தானே அதிகாரியாகி மெய்ப்பதியாகிய வினையினை எய்துவர்.

பா. 93

வடசத்தியானது மந்திரங்களினால் நீங்குதற்கு இடமில்லாதவாறு ஒழிதல்போல, புருடனுடைய இருளாகிய மலம் போல மாறும் என்று நஞ்சுண்ட சிவபெருமானுடைய ஆகமம் கூறும்.

பா. 94

அளவில்லாத பிறவி முதலிய வலிய வினைகள் உளவாக வருகின்ற கருமம் முத்தி நெறியால் எரியில் விழுந்த விதைபோல அழியும். அதன்பின் முளைத்தல் தன்மை விதைக்கு இல்லை. சைவ சித்தாந்தத்தின் மையப்பொருளே 'வறுத்தவிதை' என்பதாகும். வறுக்கப்பட்ட விதை இனம் பெருக்கும் தன்மையை இழத்தல் போல இவ்வுடலும் பிறவியை நீக்கும் நிலையே முத்தியாகும்.

பா. 95

முன்பிறவியில் புணர்ந்த வாதனைக் காரணமாக சக்கரத்தின் சுழற்சியைப் போல மீண்டும் இவ்வுடலில் தோன்றும் என்பர் ஆகம நூலார்.

பா. 96

குடமானது உடைந்த நிலையில் அதன் உள்ளிருந்து விடுபட்ட சுடரானது எங்கும் ஒளி செய்து விளங்குமாறு போலப்பிறவி நீக்கிய நெடுந்தகை, உடல் நீங்கப் பெற்ற நிலையில் அவ் ஆன்மாவானது எல்லா இடங்களிலும் ஒளிரும்.

பா. 97

பாசம் முதலியவற்றை ஒழித்துப் பிறவியை நீக்குகின்ற முக்திப்பேறாகிய விஞ்ஞான நெறியை நன்முறையில் ~~நிகழ்த்த வேண்டும்~~ வலிமையாக ஆற்றவேண்டும். சிவன் நெறியில் பொருந்திய பக்தர்களுக்கு இவ்வாகம நெறியைக் கூறிப்போற்ற வேண்டும்.

பா. 98

பரமசிவனுடைய ஆகம நூல்கள் பலவற்றிலும் அரிய ஞானக் கருத்துக்களை ஆய்ந்து ஆய்ந்து திரட்டிச் செய்த பெருமை மிக்க இந்நூலின் பெரும் பொருளைக் கொள்வ தாமே அதிகாரியாகி ஞானம் எய்துவர்.

பா. 99

நூற் பயன் கூறப்பட்டுள்ளது.

பா. 100

நூலாசிரியர் பெயர் கூறப்பட்டுள்ளது.

நூல்

திருச்சிற்றம்பலம்

ஞான மாமத யானை மேவுநம்
மான மாயையஞ் சேனை போருமே.

சிறப்புப்பாயிரம்

1. சிவனையு முக்குரு தேவன் றன்னையு நிற்பந்த யான்
   மவகையோ டடிதொழு தரைசெய் ~~திப்பவமாதி~~
   அவைவொரு சிறையுள் ஞானத் தீக்கைகள்
   அவைமன மொருக்கிய வறிஞர் வேண்டினோ

இச்செய்யுள் சிறப்புப் பாயிரம்

2. மன்னிய வுயிர்மல மாயை வன்மை
   வெல்லும் மமைற வருக்கமே ~~தத்துந்~~ ஒருவந்
   துன்னிய பயனெருந் (ளொ) தோன்ற ஞானமோர்
   மன்னுகா பரசிவன் றன்னி டத்தவே.

3. ஐயம்பிய ஞானமோ ரருள கைப்பரும்
   பயன்தரு மைபரும் பரமு மென்னவே
   நயந்தரு கலைகளே யபர ஞானமா
   முயர்த்திடு பரஞ்சொல வுணர்வென் றோதுவார்.

இச்செய்யுள் இரண்டும் வைம்பு ஞக்கிரப் பொருள்

4. படைப்புழு பொழுதுகொள் பிரம வாழுயிர்க்
கருத்தனை பயன்குறித் தைம்மு கங்களால்
எடுத்துரை செய்தன வெல்லா மாயமென
நடக்குமு யிர்களை ஞான மென்பவே.

இச்செய்யுள் மிருகேந்திர சூத்திரப் பொருள்

5. சிவநிலை முளைத்துயர் சிறப்பு ணர்த்திடுவம்
பசுமது மருந்தெனப் பட்டு நல்கமை
கலையொடு முடிவுறிற் சுக்கந்தருள்
வைக சிவையஞ் ஞானங் கொள்கவே

இச்செய்யுள் பாரிக்ய சூத்திரப் பொருள்

6. சாருந் தருமத் தன்னாற் றத்துவங்கோ ணடத்த
காரண மதனாற் றோன்றுங் காரிய மோரெடுத்த
காரிய மதனாற் மூல காரண மோதுத்த
சீரிய வுரையாற் சொல்ல தெரிந்தா மோரடுத்த

இச்செய்யுள் மதங்க சூத்திரப் பொருள்

7. அழிந்திடா மாயை மூலம் சேதன வுலகத் தோன்றி
வழுக்கையால் யாவுங் காணும் வலியொடு நிறைந்தா னாகி
வெழுத்தொழி யாத நிற்குந் திலக்குறு கருத்தா னாக
மொழிந்திடும் பதிய தற்கு மொழிந்திட ப்பதுவ வன்றே.

இச்செய்யுள் சைவசா ரோத்திர சூத்திரப் பொருள்

8. கெடுத்திடா துயர்ந்த ஞானக் கிளையையாம் வாழ்வ ருத்தர்
கொடுத்திடா தடையான் யாவுங் கூறியுங் களையல் தானே
தடுத்திடா வவிரி ரண்டுத்த ரத்துள வாதி வெங்கு
மடுத்துறு மீசனென்ன வறிந்திடப் படுவ னின்ற.

இச்செய்யுள் பார்க்கிய சூத்திரப் பொருள்

பதிப்பித்திட்டானைத்
9. ~~பதியிட்டோனைத்~~ தஞ்சீர்ப் பரைவெனப் பட்ட சத்தி
முதிரொளிப் படிவ மாக மொழிந்தவச் சிதாகா சத்தில்
விரிவிரிப் பின்றி நின்ற வினைக்குறு மூர்த்தி மானாத்
துதிகொளப் பதிதா னென்பர் தோமிறா னியம்மை கண்டோர்.

10. கட்டகள் மறைப்புடைத்தாய் மேவதாய் நுண்ணிடாகி
வெண்டிகைச முகம வாடத்த முதலுவி துயின்றி
யுன்டெ மனவாய் நீங்கா வொருபொருஞ் சாந்தசக்தி
பண்டுப சாக்கப் பட்டு பதிக்குரு வென்ன நிற்கும்.

இச்செய்யுள் இரண்டும் மத சூத்திரப் பொருள்

11. உருவது வரிதாத் தன்மை யுடைமையா லையன்றானே
மருவி யுருவாய் நின்ற வதுக்குமெச் செயலுஞ் செய்வன்
விரவி வவன்ற வாத வினையதின் கிவா றின்றி
யொருவரா லுதவப் பட்ட வுருவினாற் செய்வ தன்றாம்.

இச்செய்யுள் மருகேந்திர சூத்திரப் பொருள்.

12. சத்தியாய் வேறென் றெண்ணச் சார்கர ணமுமங் கில்லை
சித்தின் வேறாய் சித்தாஞ் சத்தியுந் தொழிலி லில்லை
இத்திற மதனா லந்த வேகமாங் காரணந் தானே
வைத்தபல் வினையாங் ஞானக் கிரியையின் மருவி நிற்கும்

13. உருவியா யுங் காலமுதலுற பலன்கள் டாங்கு
மருவரு விறைவன் றானும் வடிவில னாயிருந்த
விரிவுற முகை மாக்கும் விளங்குதல் விச்சை யாலென்று
ஒருவி மலமு டைப்பே குணர்வு குறைப்ப ரன்றே
இச்செய்யுளிரண்டுக் கான சூத்திரப் பொருள்

14. சத்தனொ டுத்தியுந் தனதும் யாவுருத்த வென்ன
முத்திற மருவு மீசன் மொழிந்தவ வுறைக்கப் பேதஞ்
சத்திதன் பேதந் தன்னாற் றானுஞ் சார மாக
வைத்ததென் னுரைப்பர் சீர்சால் மறைவோ டாகமநூ க் வல்லோர்
இச்செய்யுள் மிருகேந்திர சூத்திரப் பொருள்

15. தாயல் லமைத்த மீசனைம்பெய லுடையா னென்ப
காரியத் தொழும் புணர்த்த காணுறைப்பருவ திருச்
சீரிய துணை தென்னத் திகழ்தரு நன்மிதாவி
(யோ) (வான)
யோரியல் புதிய நிற்பது பா~~தான~~கார வந்தான்

இச்செய்யுள் பார்க்கிய சூத்திரப் பொருள்

16. பற்பல வடிவ மெய்தப் படும்பொரு ளனைத்துந் தோன்றி
நிற்புழி மலைவ வத்தா விகழ்மதி யுடைய வேது
முற்பெறு வனவே யாமும் முறைமையா லுணர்வின் மிக்க
பொற்புறு மிறைய னாகப் பொருந்துவ னொடுவ னன்றே

17. படைப்பது முகை மெல்லாம் பாதுகாத் தளித்த லைம்புன்
துடைப்பது மறைத்த லெதுந் தொல்லை மலங்கள் யாப்பு
விடுப்பது மாகு மிவ்வைம் பயன்படு வினைக ளெல்லாந்
தடுப்பில னாமொ ருத்தன் றன்பெருந் தொழிலென் றோர்வாய்

18. ஒடுங்கிய பொழுதும் பாசமொ டிப்பவர்க் கெழுந்தி டன்றி
விருந்தகை யிவரை விட்டுவி லுயிர்ச் வினை பாகஞ்செய்து
அடங்கிய மாயா சத்திதோன்றுதற்கமை த்திடா வும்
படும்படு முறைவி ருப்ப பார்த்தனன் பரம னன்றே

19. அன்பு விவ்விடம் புதல்க் கழிவன் சிற்றறி வானன்
பின்னை மலமொடு புணர்வோன் பெரியவி யாபக னசடன்
அன்னது தன்னை நகர்வோன் சொல்லிய வல்லவை முதல்வன்
தன்னை நிகர்வது மிறைவன் றனையுடை யன்பசு வென்பான்

20. புகலி லவை வாதமலம் புருடன் பசுத்துவ மென்று
பகரும் வாதிவதித்தோர் பாச மெனவு ரைத் ததனால்
இகல மருமா யைமெனும் வினைதமு னைக்குத் திருவியபாத்
தியுளர் கவென வரம்புக் கசல மெனப்படுவா லே

21. உரைத்தமல மெல்லுயிர்க்கு மொன்றாகி யனாதியாய்
பொருத்தமும் பொருதாகும் ,புகலுமான் மாக்கமொடாதும்
இருத்தமு மனாதி யிருத்தநக்கா வாந்தத்தைத்
தரித்தல்ல வகல்லவாந் சத்திபல வுடைத்ததம்மா

22. இறைவனுயிர் சத்தியா மெவ்வுயிர்க்கு மருள்செய்யப்
பெருநிலைதான் பலதருமப் பின்தொடரும் செயல்தனை
உறுதனிரத் பாசமென வுபசரிக்கப் படுமெனவே
அறைதருவ ரவனரு வாகமறா னெறி கண்டார்.

23. செப்புமுயிச் சிவசத்தி திரோதாந்த மாயைத்தீர்
பற்பலவாஞ் சத்திகளை(ப்) பரிணாமப் புத்தியதாம்
எப்பொழுதுஞ் சிவமென்று வருக்கவிராக் கபயிக்கும்
அப்பொழுதின் அருள்புரிய தாருமென வறைகுவராக்
இச்செய்யுளெட்டு மருகெதிர ருத்திரப் பொருள்

24. உண்டவையாஞ் சத்திதான் கொடுமாயை யினைகடமை

பண்டுகடந் தனதெனபர் பகருமதன் காரியங்கள்

விண்டகல வருநாத விந்துமுத லவைவெண்மைக்

கண்டுரைசெய் தனர்ஞானக் கலைமுழுதுங் கற்றுணர்ந்தார்

25. வந்த வைகரி மந்திமை யொருபை

சந்தி சூக்குமை தானெனப் பட்டிடு

நந்த வாக்கொடு நான்கு நவிலல்

விந்த மாயை விருத்தியென் றோதுவார்

26. உலக வித்தனி நாசியொன் றாயுள்

இலக சுற்றவடு நன்கிய மதைதான்

கலைக டப்பத வாதி கருதறிற்

தொகைவ தற்றக தந்திரி ருண்டவ

இச்செய்யுள் மூன்றும் சிவசாரொத்தா சூத்திரப் பொருள்

27. உரைசெய் மாயைய சிவமொரு முதல

கரும மன்னதி காரமு மவை

விந்த விதி மறைப்ப திப்பதப்

பரவு சத்திகள் பலவகை புள்ளதாம்

28. சுத்த மாமத துரைவிந் திறைவனா

மெய்த்த வேர்ச்சிவ மென்பர் விழுமியோர்

அத்த னாகுட மைந்தன் சுத்தமாய்

வைத்த மாயையின் மன்னவ னாகுமாம்

இச்செய்யுள் கிரண சூத்திரப் பொருள்

29. சாரு மாயை தனிற்கலை காலமு

நேரும் வித்தையி ராகநி யதியுங்

கரு மூலங் குணம்புத் திபோடகங்

கார சித்தம் பொறிபுலன் நதமும்

இச்செய்யுள் மிருகேந்திர சூத்திரப் பொருள்

30. பரக்கும் புண்ணிய பாவ வடிவமா

யிருக்குங் கன்மமு முத்தி றத்தனாத்

தரிக்குஞ் சாதியோ டாயுளு காலென

உரைக்குங் கன்ம முறாண்ட மின்மையே

இச்செய்யுள் சைவசாரோத்தப் பொருள்

31. அதிட்டஞ் சூக்கும மாதலாற் செயலி னாலதுதான்

உதிக்குந் தன்மையிற் கன்ம மின்னுட னதிபதற்குந்

திதிக்குங் காரணங் காலு மாயுஞ் சிவைதெரியல்

விதிக்குந் தாபமாஞ் சாதன முன்றொடும் விரவும்

32. அடுத்தப் பொய்மெயிற் றோன்றலான மறவடிவார்
தடைப்பிறப் பாக முற்றிடும் பயன்கொள் ளிடத்தோன்றும்
படைப்பிற பத்தி நின்றிடும் பெருமானை யைப் பாக்கன்
முடிக்கப் பட்டிடா தனைகாந் திடானி டின் முடிவில்
இச்செய்யுளிரண்டு மிருகேந்திர சூத்திரப் பொருள்

33. மலத்தின் யாப்புறி யிருந்தன் வாருயிர்ம றித்த
நலத்த தீக்கை யானமுந் தனுமா மெனநவில்வர்
நிலைத்த வன்மை யுவத்தை யுன்றனென நிற்குந்
தொலைத்த கேவலஞ் சகலநற் சுத்தனன் றன்றே

34. நித்த மில்ல வாக்கைத் தொழிலுடை யவைகலன்
சுத்தன நன்மையன் வியாபகன் சேதன னக்கருதிற்
சுத்தி செய்திடப் படுபவை யார்த்துறைச் சுடர்வாள்
சத்த மெக்கலன் பசுவென வியம்புதற் கார்

35. இல்லை யம்மல மென்றுரை செய்வை பேவெஞ்சொல்
சொல்லு போகமுந் தமுந்ததல் சுத்தனா மென்னில்
அல்ல சுதமப் போகமின்ற வர்க்கெனை யறைவர்
புல்லர் தம்மின மகன்றன நல்லிசைப் புலவர்.
இச்செய்யுள் மூன்றும் சாயம்பு சூத்திரப் பொருள்

36. ஞான மெய்த்தொழி லுருவகை தன்னி னுயல்
வானவப் பகண்டத் தினிலெண் ணுமுண்டா மான
மான மூத்திரி விறைமுகங் கேட்டிடு மாற்றாத்
தானெ னப்புகன் றறைகுவர் மெய்நெறி தலத்தர்

37. உகந்த ஞானமன் கென்றமுன் டெனமன் புணர்வு
திகழ்ந்தி டாமையின் மறைத்திடப் படுமெனத் தேர்வாய்
பகர்ந்ததா லவன்வி டனவாய் னசப்ப டுவன்
அகன்ற வோர்முன்றிப் புடைய வீரியன்ற கன்றே

38. பாச மின்மையிற் பரவசம் பகர்வதன்ற லக்காத்
பேசி னன்னதின் இயல்பெனின் முத்தனாம் பெயர்தான்
ஆகின் முத்தன மாட்டில் லையாமெ தன்க்றைவர்
ஈச னன்னி சைவதந்திர முணர்த்தி ருப்போர்.
இச்செய்யுள் மூன்று மிருகேந்திர சூத்திரப் பொருள்

39. பாச மாமல மனாதி யேயுத் திரும்பாசா
ஞா ச லாருயிர் சிற்றுணர்வு டையதென் னுணர்க்
ஈச னாகிய சிவன்மல மனாதியின் மையினாத்
தேச லாவுற முற்றுணர் வுளனெனத் தெளிப்பார்.

40. ஆதி யாயினை யென்று ரைக்கப் படுமென்று
ஓது வேண்டுறப் படுமருவர்க் குமென் றிங்ஙன்
ஓத லாலவர்க்க சுத்தமுஞ் சுத்தமு முருவ
நீதி யாமென வறைகு வரறிவறி நெறியார்

41. தெளிந்த தேசுகொண் டொளிதரும் பளிங்கு தான் செம்பு
களிம்ப தேசு கொண்டடைந் ததுகா ரணமங்கு
விளங்குமாறி லையென் னைமங் களிம்பிளம்பில்
அளர்த காரண மிலைசிவ மொரு மிர்க்களிறே
இச்செய்யுள் மூன்றும் கிரண சூத்திரப் பொருள்

42. கலைமுதல் லியவிலக் காது மாயின
விலகு முயிர்க்குறு கருணை யென்பராற்
பலபலங் கரணனாக் வேறு பட்டன
அலகது முயிர்தோறும் மைய வாகுமே

43. எங்ஙனும் வழக்கொருங் கிறநா மையால்
இங்கவை யொன்றல வென்பர் வேறுநீத்
தங்கது மொரு டருவ வாகுமாற்
பொங்கு காளி விரிகடர்ப் பண்டம் போலவே
இச்செய்யுளிரண்டும் பார்க்கல சூத்திரப் பொருள்.

உடம்பு அசைவு

44. முத்தியின் பொருட்டுயிர் மும்பு டம்புள
மத்தசை யுடனுற தாயினில் லையா
மெய்த்தன லிருடன் மேவு றானதன்
உய்த்தனை வுனவு யின்றுயிர்த வக்கரோ
இச்செய்யுள் அறன சூத்திரப் பொருள்

45. ஈசன திச்சையா லிசையு மொன்கலை
காகடை யவனி காரி யென்றுமுன்
பேசிய பகவினை யென்றும் பேசுவர்
மாசற விளங்கிய மதிகு ராயினார்.
இச்செய்யுள் சுவாயம்புவ சூத்திரப் பொருள்

46. இருவினை யானிறை யிறைவ னாவுடன்
மருவுவ தலதனு வல்ல னன்மையாத்
புரையுற வினை யொடுபு னர்ச்சி தன்றனால்
வருவதை யுடையதன் றெனவ குப்பரால்

47. பசுத்துவ மறைத்திடப் பருஞ் சிறு சத்தியான்
இசைத்திரு முயிர்தனக் கிலைக தந்திரம்
மசித்துறக் கருமயில் காதலா லஃதி
இசைத்திரு பவற்றனை யவாவு மெனபவே
இச்செய்யுளிரண்டும் பார்க்கிய சூத்திரப் பொருள்.

48. இச்சையின் ரன்புள னீச னாதலால்
அச்சிறன் வினையினை யுடைவிக் கின்றவன்
இச்செய லல்லது வேறில்லை யென்றுமா
முச்சுடர் விழியுடை முதல்வ னாகமும்

49. காதலு விடையம வைகரி கைதற்பொரு
போதிரு மத்திமை போமவி கற்புரு
மோதவை சந்தியின் குரைத்த வத்துக்கு
ஏதுவ தாமவ ளோதி நின்றதே

50. உலகினை முழுவது முணர்த்துஞ் சத்தியமென்று
இலகிய புலவர்தா மிசைப்ப ரன்னதை
அலதொரு பொழுதயிந் தறிவுண் டாகுவது
இலதிக முயிர்தனக் கென்று தேர்கவே

51. இத்தலை உணர்வெலா மியைந்து நின்றிடுஞ்
சத்தமோ டிசைவச் சத்தமி யாவுமே
மெய்த்திற நிலையினின் மிக்க பந்தமாய்
வைத்திடு முயிர்மறை மன்னு மிர்க்கரோ

52. போகமே விழைவுறு புருட னென்பவன்
மோகமார் மாயைதான் முதல்மய் விரென
வாகுமா தத்துவ மனைத்தும் கொண்டவன்
ஊர்களைக் கர்வினை நுகருந் சென்றரோ

53. தொலைத்திட லரியவாஞ் சகலக் காரிய
இலக்கண நுகருவற் கிசைந்த வல்லவை
பலிப்புறும் வகைசெய படுமூச் சியான்
விலக்கரும் வினையினான் மேவி யுஞ்றுமே

54. ஆகமுங் கரணமும் விடய மானதும்
போகமும் பதற்கரும் புருடற் காதுற்ற
ஏகுமீ தலையிலா வென்றி யம்புறும்
பாகுமென் மொழியமர் பாக னாகமும்

55. மாயையை நடந்தியல் மலம றைப்பவன்
ஆயுள மறைபுரு ஷாகை யானவர்
போயுரு மாயையின் போக மெய்தலின்
ஆயிடைத் தன்மைய னாக மேவியே.

56. போத்துரு விடையியே புணர்கு டும்பதான்
கேத்திர சரீரமெனன் றுற பேறொடு
வாய்த்தன சகலனென் றிசைப்பர் மாயையின்
ஆர்த்தன வறுவனை யறிஞர் தாமரோ
இச்செய்யுளெழுந் சுவாயம்புவ சூத்திரப் பொருள்

57. நீங்கருட் சத்திதன் செய்கை மீட்சியால்
ஆகிநற் சத்தியின் கத்தியிற் பெரும்
போதமெய்க் கிரியை கூடி அழுத்தம் போத்புற
முயிர்க் குல குணைக முங்கள்

58. சத்தி மன்னிய குறியொருவர் தம்முடை
முத்தியின் வழைவுள முன்பு டம்புற்
பத்தியிற் குயர்ச்சி பத்த பாவேலும்
மெய்த்திறம் விதித்தரும் வகை வேமே
இச்செய்யுளிரண்டு மருகேந்திர சூத்திரப் பொருள்.

59. அறிவில வாயின மலத்துச் சத்தியிழ்
வுதலாற் றன்னுடை யிறைமு ளர்ச்சியால்
மறிவுற மலாணவ் வாறு புத்திதால்
செறிவுதம் காரண மன்றச் செப்பமே

60. விரதகனாம் விவேகபா லறிவ ருப்புறு
மருத்திய விறிவுறு மவாவ லான்றனைக்
கருத்தழி பவக்கடல் கடத்து வானொடு
பொருத்திநின் றியக்குறும் பொருளி லீசனே.

61. இருவர்தம் மிடத்தினு முறையி யக்குவள்
அருளருள் செய்பவர் கடந்து நற்செயல்
பரிவொடு மருள்செய்ப் பருதி லற்கவர்
மருவரும் யோகமோ லாறு மன்னியே
இச்செய்யுள் முகிழ மதங்க சூத்திரப் பொருள்

62. சத்த வத்தின் தளைப்படு கின்றவர்
சத்திறந்த தரும மசைவறத்
சித்த நற்சிவ தீக்கையி னால்வாக்
மெத்த கட்டு மறுப்பது வேறிலை
இச்செய்யுள் சருவக் ஞானோத்தப் பொருள்

63. குருவ நன்னிறத் தீக்கையி னாற்குலைந்த
ஒருவு பந்தமுடைய வவர்கள்
மருவி நிர்மல வாயத்துயர் மாயத்தைத்
திரிவறுக் சிவசா யுச்ச யத்தையே
இச்செய்யுள் சுவாயம்புவ சூத்திரப் பொருள்

64. தானி லகத்தரு சத்தியு யிர்க்கிறை
வீனில் சத்தியி னித்த வியாபியா
மால வித்தை மறைத்தனின் மன்னருள்
மேவ ருத்தத் தனைத்துங் காதரோ
இச்செய்யுள் மிருகேந்திர சூத்திரப் பொருள்

65. நிறைந்த ஞான நிலையுள னாயினும்
இறந்த தாண்டை யீடுண்ட காண்களின்
அறிந்த வானோ ரிடத்தினி லாதலால்
செறிந்த வானசிற் றறிவு ளனைவன்

66. தெரியு ஞானஞ் சிறிதிற் சிறியதாம்
பொருளு தன்னிற் பொலிதன நிறக்குமெய்ப்
பரிசி ருந்தன தப்பரி சாவதாம்
இருவ ளவை மெறிகட ரென்னவே
இச்செய்யுளிரண்டும் பார்க்கிய சூத்திரப் பொருள்

67. அறிவ னாதலன் சத்திய ருத்திரற்
செறிவுறா னென்றுஞ் செப்பிய சிவனிங்கு
அறிவி லானென் றுரையப் படுவனோர்
மறிவு மானி மயக்கு னென்னவே
இச்செய்யுள் நிசுவாசகாரிகா சூத்திரப் பொருள்

68. குரவன் முன்னியல் கொள்ளுமா னாக்கனை
உரிய கோளி னுணர்த்தவ னீசனுந்
துரிய மோகத் துயில்பெற வாக்கினை
அரிய சத்தியி னாலறி விப்பனால்

69. மருந்தினாற்ற லின் மிக்க வலிவரு
மரந்தை நோயுந் றவர்க்கது போனறை
பொருந்த சத்தி பொருந்தி லன்னிலா
திருந்த வாற்ற லிசையு முயிர்க்கரோ

இச்செய்யுளிரண்டும் அரண சூத்திரப் பொருள்.

70. அகன்றன சுதந்தரத் தத்தவான் றிட்டிக் கப்பட்டு
யிருந்தன வினையாற் போக மிசைபவ னென்றுமென்றும்
புகுந்தன பகுத்தவத் தாற்பொருந் துவன்பாக் கைதன்னு
திகழ்ந்தன விகத்தவத் தாற்சேர் ஜீவன்முத் தியாகமா

இச்செய்யுள் பார்க்கிய சூத்திரப் பொருள்

71. நித்திய லோபகத் த்தாகவே நின்ற வச்சிற்
சத்தியி னுடமா யுற்றோ னாயினுந் தானருத்த
சித்தியின் பொருட்டு நன்னுந் திகழ்த்திரு பாசவத்தை
மெய்த்தன சாம்பவத் தையே தொன்றா பெற்ற நன்னாள்

இச்செய்யுள் மருகேந்திர சூத்திரப் பொருள்

72. உருவன வில்லடைந் தவல வுக்கொள் றேபாசி
பரசிவ மயமா யான்றும் பரந்ததாய விமலனாகித்
திரிவற சாந்த மாகித் திகழ்வுற சித்தஞானம்
பொருவற நகர்வீடு புரிதல தாகிநிற்கும்.

இச்செய்யுள் காலோத்திர சூத்திரப் பொருள்

73. திருமல மாகி மேலாய் திகழ்ந்தொ நிம்மை போக்கிப்
பிரிவில தாகி யொன்றாய்ப் பெரும்பார பரையாய் நின்ற
பொருசிவ சத்தி தானே யுயிரொடு பரசி வத்தைத்
திரிவற வுணர்த்தி யன்ன திகழ்வுறச் சத்தி படிக்கும்

இச்செய்யுள் நிசுவாச காரிகா சூத்திரப் பொருள்

74. சங்கரன் விமல ஞானச் சாற்றிலைத் தூக்கந் தானின்ற
அங்கவ மான மென்ப தன்றுரை யன்றென் றாளும்
இங்குற பொருளை வற்ற மென்றுநன் றின்றெ மென்னுந்
துங்களங் கன்னி வேய்ந்த செஞ்சடைப் பகவ னாலே

இச்செய்யுள் மிருகேந்திர சூத்திரப் பொருள்

75. பரந்த மேன்மை யாக்காகும் பந்தனை
இறந்த போம்படி யிருத்திடுதல் செய்வதும்
பொருந்த மேலாஞ் சிவபதம் பொருந்துறத்
திறந்திடா தருள்வதுந் தீக்கை யாகுமால்

இச்செய்யுள் சாவாயம்புவ சூத்திரப் பொருள்

76. செப்பரி தாய தீக்கை மாமொழி
மெய்ப்பொருள் மலவலி விடக் கொடுப்பது
மெய்ப்பது ஞானநல் குவது மென்னுமா
லப்பர னருளி வாக மங்களே

77. தானமுந் துணர்த்திடு நலச்சத் தாய
ஞானமெய் சத்திய நவின்ற தாரருள்
மௌனநற் குரவனால் விளங்கு மன்றியே
வவெடுத்திடு முயிர்க் கொளிர்வ தின்றரோ
இச்செய்யுளிரண்டு மதங்க சூத்திரப் பொருள்

78. என்றட லைவனை விருந்த தன்னையே
மின்றிக முறிவெனும் விழியிற் காண்குவன்
நன்றவன் மனிர்வுறு சாந்த ஞானவ
நின்றன வவாவினை நீங்கு மென்றுமே
இச்செய்யுள் தேவிகாமத் சூத்திரப் பொருள்

79. தீக்கையா மனவாற் றிம லத்தினால்
நீக்கமாய் தன்வலி நிகழப் பட்டிடுந்
தா(க்)வா வறைபெருஞ் சத்தி யோடவற்
காக்குறா முத்தியை யயலொள் ளென்பவே.
இச்செய்யுள் மதங்க சூத்திரப் பொருள்

80. இம்முறை யோகிநால் வகைசைவ வப்பருஞ்
செம்மைகொள் கேவலஞ் சேர்ந்த வாணவன்
மைமலி மளாதிய மலமி லாமையால்
வெம்மைகொள் பிணைவால் மீண்டி டானரோ
இச்செய்யுள் வளையம்புல சூத்திரப் பொருள்.

81. சாக்கிரந் தன்னிலே சகல பாவமும்
போய்க்குலி வுறமெனற் கறிந்து போலவே
மீக்கினர் வடையுமெஞ் ஞான மன்னதாந்
காக்குதல் முப்பதம் கட்டு மாலியே

82. சங்கர னாகிய தபனன் சத்தியாம்
பொங்கொளி யால்வலி புரிந்த சித்தெனும்
அங்கண் மறைப்பொளி(இ) சத்தி யாதியோடு
இங்குயிர் ஏவற்றவை மிசைந்த காணுமே.
இச்செய்யுள் இரண்டு நீ லொசகாரிகா சூத்திரப் பொருள்

83. உற்கைகொள் காமுடை யொருவன் காணுபு
தற்பொருள் பிணையுத தனைவி டுத்தல்போல்
நற்குரு முனாவினாள் செயல் கண்டுயின்
மற்புக ளேரிலை முறை நீப்பவனாக்.

84. மனமொரு பரசிவதத்து வத்தினில்
நினைவுறும் விரிவற வொடுங்கி நிற்குமேல்
இனைவுறு புணர்வெனப் பட்ட யாவையும்
புனைவில குறாநிலை பெயர்ந்து போகுமே

85. தரைமுத லியபல தத்து வங்கடந்து
உரைமன மிறந்தபற் றொன்று மின்றிவாழ்
பரமனை மருவுறு பவனை முத்தனென்று
அரனெனி கடவுளா லறையு மென்பருவ

86. வசையுறு பவநெடு வழியு றாதவர்
பசையுறு சிவத்தினைச் சேர்க்கப் பட்டவர்
அசையுறு சுடரென வமைந்து பெற்றவர்
இசையுறு நலமெலா முற்றி னாவரோ
இச்செய்யுள் நான்கும் சுவாயம்புவ சூத்திரப் பொருள்

87. மந்திரத் தியானமே யெக்கும் பூசனை
தந்திர முறையினைச் சாறுதல் காலன்
நிர்தையி லொருதனி சேர் மெய்தலாற்
பந்தமோ டறிதரப் பருவ மில்லையே
இச்செய்யுள் நான்குஞ் சுவாயம்புவ சூத்திரப் பொருள்.

88. கடுநடை யிடையினுங் கால வெம்பினை
விடுவ தியைவது போல மேவிய
துடைவரு வேயமுற் றழுந்த நெஞ்சினோன்
விடையமோ டுழனு மதைவி டாவனே

89. இந்திய விலையினை வையத் தேசிகன்
சிந்தனை தடைபறச் செல்வ மங்கலம்
இந்திய விலைகடந் திலங்கு மெய்ப்பதத்த
உத்தம மதிதரு முறையு மோருமால்

90. அழுக்கு பசுமுத லயமுந் தாரையென்று
இழுக்குறு பொருள்கள் விமைமட் டங்களை
விழுமன வெண்ணமெய்ப் பரத்தின் மேவினோன்
பிழைபடு கொடியவெம் பிறப்பின் மீண்டிடான்

91. கரும்பக பாவனை கடந்த நீங்கியே
பெரும்பதி பாவனை பெற்ற நிற்(ப)னே
விரும்புற செலவலாம் விமலன் மாட்டுற
வருஞ்செல வலிற்றனக் கெத்தி றத்தினாம்

இச்செய்யுள் நான்கும் சிவாச காரிகா சூத்திரப் பொருள்

92. புனிதனில் வைத்தன போக போத்தரு
ளுரியவந் தில்லையாத் போத்த ருத்தவந்
தனியதி காரியாந் தன்மை மெய்ப்பதி
வினையொடு படுதலென் றிறைவ னெம்பிரனே
இச்செய்யுள் கலையெம்புல சூத்திரப் பொருள்.

93. வருவட சத்திநாள் மந்தி ரங்களாக்
ஒருவட வடக்கெடா தொழிதல் போலுமாற்
புருடன் திருமலம் போன்று மாறுமென்ற
அருவட முட்டவ னாகமத் சொலும்

94. அவனில் பவமுத லாய வல்வினை
யுளதென வருவதாம் கரும மொன்னொ
கொழுவிய வினையெனக் குவையு முன்புவ
இவைவன வல்வுடற் கரும மெனபவே

95. தோன்றிடு மொன்கலத் சுழ(லும்) றேமியைப்
போன்றிடும் விடாதுள் புணர்ந்த வாதனை
மீன்றிடு மல்வுடத் நாத மெனபதால்
ஆன்றன வாகம நால நித்தனோர்.
இச்செய்யுள் மூன்றும் கீரன சூத்திரப் பொருள்

96. உடைந்திட வுதங்கு முனி ருந்தொளி
விருத்தட ரெக்கும் விளங்கு மாதுபோல்
நெருந்துகைப் பெறுமுட லிங்க வெக்குமெய்
விடங்கது மொளிருமா னமர்நின் றெல்பவே.

97. தொந்தவுந் தானநல் குறத்தி மூழ்த்துக
பொருந்துநம் பத்தர்கட் கெல்லம் போற்றுக
வருந்திற மலைதரு மடவ ராம்பொருள்
கரந்தொழி கல்லரைக் கருதக் காத்தக்போக்
இச்செய்யுளிரண்டுந் தேவையாமத குத்திரப் பொருள்

98. பரம ஞாலக்கி பயனைத் தேர்ந்துதே(ர்த்)
தருமை ஞான மறுப தீ திரட்டிய
பெருமை நூ லின் பெரும்பொருள் கொள்ளவெக்
கருமி நானதி காரிய லானரோ.

99. சுற்று மெல்லைய சதுமன் மாலையைப்
போற்றி யோதிப் பொருவெடா க்கிபவர்
மாற்றி மூல மைத்தையெப் போதுந்
தோற்று ஞானச் சுடரினைக் காண்பரே.

100. தவல ருஞ்சொற் சதமணி மாலையைப்
புவனி ரும்பப் புகன்றரை செய்தவன்
சவிகொள் சங்கத் தமிழ்க்குழ விக்கொரு
செவிலி யென்ற சிவப்பிர காசனே.

கலைச்சொற் பட்டியல்

இறைமையும் முறைமையும், இராமலிங்கம் புலவர் எல். இ., திருவள்ளுவர் பதிப்பகம், சென்னை, 1989

சிவஞான போதம், முருகவேள், ந.ரா., (பதி. ஆ.), சேக்கிழார் பதிப்பகம், குன்றத்தூ ர், சென்னை, 1983.

சிவஞான போதம் மூலமும் சிவஞான சுவாமிகள் அருளிய சிற்றுரையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சிதம்பரம், 1963

சைவசித்தாந்தர், முத்துராமன் டாக்டர், தமிழ் நாட்டுப் பாடநூ ல் நிறுவனம், சென்னை, 1975.

சைவசித்தாந்தம், முருகவேள் ந.ரா., சேக்கிழார் பதிப்பகம் சென்னை, 1984.

தமிழ் இலக்கியக் கொள்கைகள் - 2, சுப்பிரமணியன் டாக்டர், ச.வே. (பதி) க.த. திருநாவுக்கரசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977

தமிழ் இலக்கியக் கொள்கைகள் - 4, சுப்பிரமணியன் டாக்டர், ச.வே. (பதி) க.த. திருநாவுக்கரசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை 1979

திருமந்திரம், திருமூலர், ஸ்ரீ குமர குருபரர் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம், 1976

திருவருட் பயன், உமாபதி தேவ நாயனார், திருவாவடுதுறை
ஆதீனம், கடலூர், 1957, பதி. இ.

தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் (உரை)
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969
பதிப்பு மூன்று.

முத்தி நெறி, சுப்புரெட்டியார் டாக்டர், ந., பாரி நிலையம்
சென்னை, 1982.

பின்னிணைப்பு

முதற் சூத்திரம்: பதியுண்மை

அவன் அவள் அதுஎனும் அவை,மூ வினைமையில்
தோற்றிய திதியே; ஒடுங்கிமலத்து உளதாம்;
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

இரண்டாம் சூத்திரம்: பாச உண்மை

அவையே தானே யாய்,இரு வினையிற்
போக்கு வரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

மூன்றாம் சூத்திரம்: பசுவுண்மை

உளதிலது என்றலின், எனதுடல் என்றலின்
ஐம்புலன்-ஒடுக்கம் அறிதலின், கண்படில்
உண்டிவினை யின்மையின், உணர்த்த வுணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா

நான்காம் சூத்திரம் பசு இலக்கணம்

அந்தக் கரணம் அவற்றின் ஒன்றன்று, அவை
சந்தித்தது; ஆன்மாச் சகசமலத்து உணராது;
அமைச்சரசு ஏய்ப்பநின்று அஞ்சவத் தைத்தே

ஐந்தாம் சூத்திரம் பாச இலக்கணம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந் தறியா; ஆங்கவை போலத்,
தாம்தம் உணர்வின் தமியருள்;
காந்தம் கண்ட பசாசத் தவையே.

ஆறாம் சூத்திரம் பதி இலக்கணம்

உணர்உரு அசத்தெனின். உணராது இன்மையின்,
இருதிறன் அல்லது சிவசத் தாமென;
இரண்டு வகையின் இசைக்கும் மன்னுலகே

ஏழாம் சூத்திரம் ஆன்மாவின் சிறப்பிலக்கணம்

யாவையும் சூனியம், சத்தெதிர் ஆகலின்,
சத்தே யறியாது; அசத்து இலது அறியாது;
இருதிறன் அறிவுளது, இரண்டலா ஆன்மா.

எட்டாம் சூத்திரம் ஞானத்தினை உயரும் முறை

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்,
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த, விட்டு
அன்னியம் இன்மையின், அரன்கழல் செலுமே!

ஒன்பதாம் சூத்திரம் ஆன்மசுத்தி (சாதிக்கு முறைமை)

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி;
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழல் ஆம் பதி; விதி எண்ணும் அஞ்செழுத்தே

பத்தாம் சூத்திரம் பாச நீக்கம் உணர்த்துதல்

அவனே தானே ஆகிய அந்நெறி

ஏகன் ஆகி இறைபணி நிற்க, 1

மலமாயை தன்னொடு வல்வினை இன்றே

பதினொன்றாம் சூத்திரம் சிவப்பேறு

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்

காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்,

அயரா அன்பின் அரன்கழல் செலுமே

பன்னிரண்டாம்_சூத்திரம் (அணைந்தோர் தன்மை)

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா

அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ,

மால் அறநேயம் மலிந்தவர் வேடமும்

ஆலயம் தானும், அரன் எனத் தொழுமே,

சொல்லடைவு

அகங்காரம்	...	29.3
அங்கன்	...	74:2
அசடன்	...	19:2
அசுத்தம்	...	40:3
அசேதன உலகம்	...	7:1
அடி	...	1.2
அணு	...	56:4
அதிகாரம்	...	27:2
அதிட்டம்	...	31:1
அதிட்டானம்	...	9:1
அத்தன்	...	28:3
அபரம்	...	3:2
அமலன்	...	11:1
அருள்	...	23:4, 61:2
அவத்தை	...	33:3
அவா	...	59:1
அவிகாரி	...	45:2
அறிஞர்	...	1:4, 56:4, 89:4
அறிவன்	...	67:1

அறிவிலன்	...	59:1
அறிவு	...	50:3
அனந்தன்	...	28:3
அனாதி	...	21:1
அவ்வியன்	...	19:1
ஆகமம்	...	48:4, 54:1, 54:4
ஆசை	...	55:2
ஆணவம்	...	23:1
ஆதி	...	40:1
ஆதிநற்சக்தி	...	57:2
ஆதிமலம்	...	20:1
இச்சை	...	13:3, 45:1, 48:1
இந்தியவகை	...	89:1
இருங்கதிர்	...	23:3
இருவர்	...	61:1
இருவினை	...	46:1
இறை	...	64:1
இறைவன்	...	13:2, 16:4, 19:4
		46:1
உடல்	...	44:2
உணர்ச்சி	...	59:2
உணவு	...	44:4

உயிர்	...	41:4, 42:2, 44:1
		47:2, 50:4, 64:1
		67:4, 77:4, 82:4
உயர்குருதேவன்	...	1:1
உயிர்மலம்	...	2:1
உருவிலி	...	13:1
உலகம்	...	13:3, 17:1, 26:1
உலகு	...	50:1
ஊசலாருயிர்	...	39:2
எண்டிசை	...	10:2
எமன்	...	15:1
ஐம்முகங்கள்	...	4:2
ஒருவன்	...	16:4
கத்தனன்மையான்	...	34:2
கரணம்	...	54:1
காமத்திமை	...	25:1
காவிகற்பு	...	49:1
கருத்தா	...	7:3
கருமம்	...	27:2, 31:2, 47:3
கருவி	...	42:2
கலை	...	42:1
கலை ஞானம்	...	4:4
களம்பு	...	41:2
கன்மம்	...	30:4

காச	...	45:2
காரணம்	...	6:2, 15:4, 31:3
காரியம்	...	6:2, 6:3
காலம்	...	29:1
கிரியை	...	57:3
குடும்பி	...	56:1
குணம்	...	29:3, 34:1
குண்டலி	...	24:1, 26:4
குரவன்	...	68:1
குரு	...	62:1
கேத்திரி	...	56:2
கேவலம்	...	80:2
கேவலன்	...	33:4
கொடுமாயை	...	24:1
சகலபாவம்	...	81:2
சகலன்	...	56:3
சங்கரன்	...	74:1, 82:1
சத்தம்	...	51:2
சத்தன்	...	14:1, 34:4
சத்தி	...	9:1, 12:1, 12:3, 21:4, 22:1, 23:2, 24:1, 27:4, 50:1, 58:1, 59:1, 64:1, 64:2, 67:1, 68:4, 69:3, 71:2, 78:4, 82:1, 93:1

சரீர	...	56:2
சாக்கிரம்	...	81:1
சாதனம்	...	31:4
சாந்தசக்தி	...	10:3
சாந்தன்	...	78:3
சிதாகாசம்	...	9:2
சித்தம்	...	29:4
சித்தி	...	71:3
சித்து	...	12:2
சிந்தனை	...	89:2
சிவசக்தி	...	23:1, 73:2
சிவதீக்கை	...	63:3
சிவத்துவம்	...	2:2, 70:4, 86:2
சிவநிலம்	...	5:1
சிவபதம்	...	75:3
சிவபத்தர்	...	58:3
சிவம்	...	23:3, 27:1, 28:2 41:4
சிவன்	...	1:1, 48:2, 67:2 82:4
சிற்சக்தி	...	47:1,
சிற்றறிஞன்	...	65:4
சிற்றறிவாளன்	...	19:1
சிற்றுணர்வு	...	39:2
சுகதுக்காதி	...	53:1

சுதந்தரம்	...	70:1
சுதந்தரி	...	26:4
சுதந்திரம்	...	47:2
சுத்தம்	...	40:3
சூக்குமம்	...	31:1
சூக்ஷமம்	...	25:2
செம்பு	...	41:1
சேதனன்	...	34:2
சைவதந்திரம்	...	38:4
ஞானக்கலை	...	24:4
ஞானத்தீக்கை	...	24:4
ஞானநிலை	...	65:1
ஞானமாமத யானை	...	1:1
ஞானமெய் சத்தி	...	77:2
ஞானமெய்த் தொழில்	...	36:1
ஞானம்	...	3:1, 5:4, 37:1 66:1
ஞேயம்	...	83:3, 88:2
தத்துவம்	...	52:3, 80:2
தந்திரம்	...	87:7
தபனன்	...	78:1
தருமம்	...	22:2, 63:2
தனாதிகாரி	...	92:4

திதி	...	31:3
தியானம்	...	87:2
தீக்கை	...	33:2, 75:4, 76:1
		79:1
திருவருட் சத்தி	...	57:1
தீமலம்	...	78:2
தேக	...	39:4
தொழில்	...	34:1
நற்சுத்தகள்	...	33:4
நற்றீக்கை	...	62:1
நாதவிந்து	...	24:3
நித்திய வியாபகன்	...	71:1
நிருமலம்	...	73:1
நின்மலன்	...	62:3
நெருத்தகை	...	96:3
நோய்	...	69:2
பகவன்	...	74:4
பசு	...	19:4, 45:3
பசுத்துவம்	...	20:1, 47:1, 70:3
பண்டம்	...	43:4
பதி	...	7:4
பந்தம்	...	62:2

பதசிவம்	...	73:3, 72:1, 84:1
பரசிவன்	...	2:4
பரமன்	...	4:1, 8:4
பரம்	...	3:2
பரவசம்	...	38:1
பரை	...	9:1
பவக்கடல்	...	60:3
பளிங்கு	...	41:1
பரன்	...	76:4
பாசம்	...	18:1, 20:2, 22:3
		38:1, 39:1
பிரவிரத்தன்	...	14:1
பிறவி	...	80:4
புணர்ச்சி	...	46:3
புண்ணியம்	...	30:1
புத்தி	...	29:3
புருடர்	...	20:2
புருடன்	...	52:1, 54:2, 93:3
புல்லர்	...	35:4
புனிதன்	...	92:1
பூசனை	...	87:4
பொாய வியாபகன்	...	19:2
பெருமானை	...	32:3
பைசந்தி	...	25:1, 49:3

பொய்மெய்	...	32:1
போகம்	...	35:2, 52:1, 54:2 55:3, 70:2
மடவர்	...	97:3
மதிஞர்	...	45:4
மத்திமை	...	49:2
மந்திரம்	...	87:1
மருந்து	...	69:1
மருள்	...	61:3
மலங்கள்	...	17:2
மலம்	...	19:2, 33:1, 39:1 55:1
மலவலி	...	76:2
மறை	...	51:4
மனு	...	55:2
மன்னர்	...	64:2
மன்னவன்	...	28:4
மன்னுயிர்	...	51:4
மாணிக்கம்	...	68:1
மாயாசக்தி	...	18:3
மாயை	...	20:3, 25:4, 27:1 28:4, 29:1, 52:2 55:1, 55:3
மீட்சி	...	51:1
முகம்	...	10:2

முச்சுடர்	...	48:4
முதல்வன்	...	48:4
முதனுணருதி	...	10:2
முத்தன்	...	33:2, 38:2, 38:3
முத்தி	...	44:1, 58:2
மும்மலம்	...	2:2
முற்றுணர்வு	...	39:2
முனையார்	...	57:4
மூலம்	...	29:3
மூர்த்தி	...	9:3
மெய்ஞ்ஞானம்	...	81:3
மெய்தெரித்தலத்தன்	...	36:4
மெய்த்திறம்	...	58:4
மெய்ப்பொருள்	...	76:2
மோகத்துயில்	...	68:3
யோகம்	...	61:4
யோகி	...	80:1
வல்வினை	...	2:1, 94:1
விஞ்ஞானம்	...	97:1
விடையம்	...	49:1, 54:1, 88:4
விதி	...	58:4, 78:2
விதிர்விதிர்ப்பு	...	9:3

விதை	...	94:3
வித்தை	...	29:2, 64:3
விந்து	...	25:4
விமலஞானம்	...	74:1
விமலம்	...	72:2
வியாபகன்	...	34:2
விரத்தன்	...	60:1
விரிசுடர்	...	43:4
விருத்தி	...	25:4
விவேகி	...	60:1
விழி	...	48:4
விளக்கு	...	75:1
வினை	...	18:2, 24:1, 31:3
		46:3, 48:2, 54:3
வினைப்பாலம்	...	18:2
வினைமுதல்வன்	...	19:3
வீடு	...	37:3, 44:3
வீரியன்	...	37:4